விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினம் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
8 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா " 12-00
1 வருடச் சந்தா " 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

சித்திரை | மகாபுரட்டாதி, ரேவதி, அஸ்வினி, கார்த்திகை 10உ செவ்வாய்க்கிழமை | Colombo November 25 1947 | ஹிஜிரி 1367 மஹாரம் பிறை 11 | இதழ் 175

புதிய பாராளுமன்ற திறப்பு விழா

குடியேற்றநாட்டு மந்திரியின் வாழ்த்துச் செய்தி

டொமினியன் அந்தஸ்துபற்றி கவர்னர் பிரசங்கம்

தூர கிழக்கு ஆசியா பிரிட்டிஷ் சடற்படை விமானப்படை, தரைப்படை தளபதிகள் விஜயம்

கொழும்பு. நவ. 25

இன்று பாராளுமன்ற திறப்பு விழாவை முன்னிட்டு பி. பி. ஸி ரேடியோவில் குடியேற்ற நாட்டு மந்திரி இலங்கை மக்களுக்கு நேற்று ஒரு செய்தி விடுத்தார். நேற்று மாலை 7-15 மணிக்கு கொழும்பு ரேடியோ குடியேற்ற நாட்டு மந்திரி பி. பி. ஸ் யில் பேசிய பேச்சை அஞ்சல் செய்தது. இவருடைய பேச்சின் பின் சோல்பரி பிரபு, திரு கொரியா, டாக்டர் டி நம்மன்ட் ஷீல்ஸ் ஆகியோர் ஒரு சபரிஷணை நடத்தினர். இதுவும் அஞ்சல் செய்யப்பட்டது. முடிவில் இலங்கை கவர்னர் கொழும்பு ரேடியோவில் இலங்கை மக்களுக்கு ஒரு செய்தியை வெளியிட்டார்.

குடியேற்ற நாட்டு மந்திரி செய்தி

சரித்திரப் பெருமை வாய்ந்த இச்தருணத்தில் இலங்கை பக்களுக்கு இந்தச் செய்தியை மகிழ்ச்சியுடன் அனுபுகிறேன்.

நாளைய தினம் புதிய பாராளுமன்றம் கூடும்போது, இலங்கை முதன் முதலாக தனது உள்நாட்டு விவகாரங்களில் பூரண பொறுப்புஎய்தும். இலங்கை மக்கள் எல்லோருடைய நன்மையையும் மனதில் வைத்து உங்கள் தலைவரும் பாராளுமன்றமும் அறிவும் ஆற்றலும் பெறவேண்டுமென வாழ்த்துகிறேன். ஆனால் உங்கள் அரசியல் வாழ்வில் இன்னொரு முக்கிய மாறுதல் உண்டாகப் போகிறது. இம் மாறுதலின் பலனாக உங்கள் நாடு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சமமாகும் வகித்து, சகலவிதமான பரிபாலனத்திலும் முழுப் பொறுப்பு எய்தும். அந்த பாறுதலோடு குடியேற்ற நாட்டு மந்திரி என்ற முறையில் இலங்கைக்கும் எனக்கும் உள்ள தொடர்பு அற்றுப் போகும். எனது பதவிக் காலத்தில் இப்படி இரு முக்கியமான மாற்றங்கள் ஏற்படுவதுபற்றி நான் மிக மகிழ்கிறேன். உங்கள் நாட்டின் அரசியல் முன்னேற்றத்தில் நீங்கள் கொள்ளும் பெருமையில் எனக்கும் பங்குண்டு. அந்த முன்னேற்றத்தை பன்னர் அரசாங்கம் உணர்ந்து தகுந்த மதிப்பை அளிக்கிறதுபதை யிட்டும் எனக்குச் சந்தோஷம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்குள் உங்கள் வருகையை வரவேற்கிறோம்.

1931-ம் வருடம் அளிக்கப்பட்ட அரசியல் திட்டத்தை இப்பொழுது ஞாபகப்படுத்திப் பார்த்தால், அது ஓரளவு கடினமானதென்பது தெரியவருகிறது. ஆனாலும் அதைக் கொண்டு நடத்துவதில் உண்டான இடையூறுகளே அரசியல் துறையில் உங்களுக்கு அரிய அனுபவத்தை அளிப்பதற்குப் ஏதுவாயிருந்தன. யுதகால நெருக்கடிகளுக்குள் இவ்வரசியல் முறை மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

குடியேற்றநாட்டு இலாகாவில் இருந்தமையினால் உங்கள் பிரதம மந்திரியையும் மற்றத் தலைவர்களில் சிலரையும் அறியும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கிறது. எப்பொழுதும் எமது தொடர்புகள் மிகுந்த சிநேகபாங்குடன் வளர்ந்து வந்திருக்கின்றன. பாராளுமன்ற இம் முடிவுகள் பரந்த ஒற்றுமையோடும், நேர்மையோடும் இயற்றப்பட்டுள்ளன என்பது எனது திடமான நம்பிக்கை. அவை என்றும் நன்மையைக் கக்கூடியவை. சம்பிரதாயமான கொண்டாட்டங்களோடு இலங்கைப் பாராளுமன்றம் திறக்கப்படுவதை நான் பிரசையுடனும், திருப்தியுடனும் நான் எதிர்பார்க்கிறேன். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பூரண பரிபக்குவ நிலையை நோக்கச் செல்லும் உங்கள் நாட்டின் பிரயாணம் தங்குதடையின்றி இனிதுவானதாய் இருக்கவேண்டுமென நான் அதிவக்கிறேன் அதிர்ஷ்டதேவதை உங்களைக் கடாக்ஷிப்பளாக!

ரேடியோவில் சம்பாஷணை

திரு கொரியா, சோல்பரி பிரபு, திரு மற மன்ட ஷீல்ஸ் ஆகியோர் பி பி ஸி ரேடியோவில் நடத்திய சம்பாஷணை கொழும்பு ரேடியோவில் அஞ்சல் செய்யப்பட்டது. இவர்கள் இலங்கையின் அரசியல் திட்டம் டொனமூர் அரசியல் திட்டத்தினால் இலங்கைக்கு ஏற்பட்ட நன்மைகள், பொருளாதாரம், விவசாயம், தொழிலாளர் நிலைமைகள் சமீபத்திய தேர்தல்கள் முதலியவைபற்றி தம்முள் சம்பாஷணை செய்து கொண்டனர். இலங்கையின் சார்பில் திரு கொரியா இவர்களுக்கும், குடியேற்றநாட்டு மந்திரிக்கும் தமது நன்றியை தெரிவித்தார்.

கவர்னர் பிரசங்கம்

இன்றைய தினம், இலங்கையின் முதல் பாராளுமன்ற திறப்பு விழாவை முன்னிட்டு நாம் ஒவ்வொருவரும் தத்தம் மதக் கோட்பாடுகளுக் கேற்ப இறைவனுக்கு வணக்கமும் நன்றியறிதலும் செலுத்தியுள்ளோம். இலங்கையின் பிரஜைகள் என்ற முறையில் எமக்கு செவ்வனே நிறைவேற்ற வரம் கடவுள் எமக்கு வழிகாட்டியாயிருப்பாராக.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த சம்பவத்தைப்பற்றி சோல்பரி பிரபு, திரு கொரியா, டாக்டர் ட்றமன்ட் ஷீல்ஸ் ஆகியோர் நடத்திய சம்பாஷணையையும், இலங்கைக்கு அதன் முதல் பிரதம மந்திரிக்கும் குடியேற்ற நாட்டு மந்திரி அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்திகளையும் இன்றுமாலை கேட்டிருப்பீர்கள். நான், மன்னரின் பிரதிநிதி என்ற முறையில், நான் பாராளுமன்றத்தை திறந்துவைக்கும்போது, எனது மந்திரிகள் தயாரித்துக் கொடுத்த பிரசங்கத்தை வாசிப்பேன். ஆகையினால், இலங்கை மக்களுக்கு எனது சொந்தச் செய்தியை கொடுப்பதற்கு இதுவே கடைசிச் சந்தர்ப்பம்.

இலங்கைக்கு நான் சேவை செய்யத் தவறவில்லை. இன்றைக்கு 37 வருடங்களுக்கு முன்னர், ஆகையால் பல காலமாக உங்களைத் தெரிந்தவன் என்று நான் கூறிக்கொள்ள முடியும். 23 வருடங்களாக வெளியூர்களில் நீண்டயாத்திரை செய்து விட்டு 3 வருடங்களுக்கு முன் நான் திருப்பி வந்தபோது, பழைய நினைவுகள் பலதோன்றின. வெளியே இருந்த நாட்களில், முக்யமாக குடியேற்ற நாட்டு இலாகாவில் உதவி சாரயதரிசியாக இருந்தபோது, உங்கள் அரசியல வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்களையும், முன்னேற்றங்களையும் கவனித்து வந்துள்ளேன். யுத்தத்தின் காரணமாக கொழும்பின் தோற்றமே மாறிப்போயிருந்ததையும், சடுதியாக ஏற்பட்ட ஓர் நெருக்கடியை சமாளிப்பதற்கு அமைக்கப்பட்ட யுத்தகால அரசாங்கப் ஒன்று இருப்பதையும் நான் கருபபி வந்தபோது கண்டேன். மேற்பார்வைக்கு அந்த அரசாங்கம் சீர்குலைந்து போயிருப்பது போலக் காணப்பட்டாலும், அதன் திறமையான பரிபாலனத்துக்கு காரணபூதராளாயிருந்தவர்கள் எனது முன்னவரான சேர் அன்ட்ரூ காரடிகோட், பிரதம சேனாதிபதி

[4-ம் பக்கம் பார்க்க]

கள்ள மார்க்கெட்டுக்குச் செல்லும்உணவுப்பொருள்கள்

அரிசி, மா சம்பந்தமாக மோசடி

மாத்தளை, நவ. 24

மாத்தளைப் பகுதியில் பொது தொகையான அரிசியும், மாவும் கள்ள மார்க்கெட்டுக்கு விற்பனைக்குப் போவதுபற்றி அனுமதியக் கடிதங்கள் கிடைத்ததன்மேல் ஸ்சல உணவு இலாகா அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து சில விஷயங்களை கண்டுபிடித்துள்ளனர். சுமார் ஒரு வருடகாலமாக மாத்தளை மாகாணியில் கள்ளமாக உணவு கடுப்பாட்டதிகாரியிடமிருந்து இப் பொருள்கள் அரசாங்க பண்ணைகென்று கூறி வாங்கப்பட்டு வரப்பட்டுள்ளனாக தெரிய வந்துள்ளது. இது சம்பந்தமாக அதிகாரிகள் விசாரணை செய்தபோது உணவு கடுப்பாட்டிலாகாவிலிருந்து பெர்மிட் புத்தகங்கட காணாமல் விலையென்று தெரியவந்துள்ளது. அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் கள்ளமாக வாங்கப்பட்ட இப்பொருள்கள்தான் கள்ள மார்க்கெட்டுக்கு விற்கைக்குப் போவதாகத் தெரிகிறது.

மண்டாகும் கூடிய பொறுப்புக்களை செவ்வனே நிறைவேற்ற வரம் கடவுள் எமக்கு வழிகாட்டியாயிருப்பாராக.

தொழிற்சங்க ஆலோசகர் கப்பலேறிவிட்டார்

கொழும்பு, நவ 25

சென்ற வருடம் அக்டோபர் மாதம் 26-மதேதியன்றுமூன்று வருட ஒப்பந்தத்தின் மீது இலங்கை சர்க்காரின் தொழிற்சங்க ஆலோசகராக நியமிக்கப்பட்ட திரு டி டிரவர் ஹல்சன் ஒப்பந்தத்தை ரத்துச் செய்துவிட்டு உத்தியோகத்திலிருந்து விலகி நேற்று 'ஓரியன்' கப்பலில் லண்டனுக்குச் சென்றுவிட்டார்.

அவரை உத்தியோகத்தில் அமர்த்திய இலங்கை அரசாங்கம் அவரது ஆலோசனைகளைப் புறக்கணித்ததுமன்றி தனது இஷ்டப்படி நடவடிக்கை எடுத்து அவரை மூலையில் ஒதுக்கி வைத்திருந்தது. அவரது மனச்சாட்சிக்குப் பிடிக்கவில்லையாதலால் அவர் வேலையிலிருந்து விலகிச் சென்றார்.

அரசாங்க ஊழியர்களிடையேயும் மற்றும் தொழிலாளர்களிடையேயும் தொழிற் சங்கங்கள் அமைக்க அரசாங்கம் தனக்கு உதவி செய்யுமென்று நம்பி வந்தாகவும் அவர் நடைமுறையில் ஏமாற்றமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார். அவரது ஆலோசனைகளை புறக்கணித்து அரசாங்க ஊழியர் சேவை சம்பந்தமாக மழுவாலத்திய கடுமையான வதிகளை ஏற்றுக்கொள்கிறார்கள் என்றும் ஸ்தாபனங்களிடம்தான் நெருங்கமுடியாது தனது வேலைகளுக்கு இடைஞ்சல் செய்தது தனது நோக்கத்தை நிறைவேற்றமுடியாது செய்தார்கள் என்றும் தெரிவித்தார்.

நிர்வாகிகளின் அரசியல் தவேஷமும் பிரிட்டிஷ் தொழிற் கட்சி அரசாங்கத்தின்மீது அவர்கள் காட்டிய வெறுப்புர் தனது அரசியல் லட்சியக்திற்கு பங்கம் உண்டுபண்ணக்கூடியதாக இருந்ததால் அவர் வேலையை ராஜினாமா செய்ததாக அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் சர்வ கலாசாலைகள் மகாநாடு

எச். எஸ். ஸி. பரீட்சை அங்கீகாரம்பற்றி தீர்மானம்

கொழும்பு, நவ. 24

இந்தியாவில் சனிக்கிழமை நடக்கப்போகும் சர்வ கலாசாலைகள் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு இலங்கை சர்வ கலாசாலை உப அத்தியக்கர் டாக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் செல்வார். இந்தியாவில் லண்டன் மெட்ரிக்குலேஷன் பரீட்சைக்கு சமமாக இலங்கை எச். எஸ். ஸி. பரீட்சையையும் அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமென்னும் தீர்மானத்தையும் இச்சபையில் இவர் இலங்கை கல்வி டைரக்டரின் வேண்டுகோள் மீது கொண்டுவருவார் என்று அறியப்படுகிறது.

தமிழ் கவர்னர் ஜெனரலின் சகோதரத்துவ உணர்ச்சி

ஆடம்பரமான சம்பிரதாய முறைகளைத் தகர்த்தெறிந்தார்

வேலைக்காரர்களுடனும், சமையற்காரர்களுடனுமிருந்து அசோகர் படக்காக்ஷி பார்த்த அதிசயம்!

புதுடில்லி, நவ 22

தமிழ் கவர்னர் ஜெனரலான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் ஜனநாயகத் தத்துவத்திற்கும் காலரதிக்கும் ஏற்ப கவர்னர் ஜெனரல் மாளிகையில் ஒரு சம்பவதை நடத்திக் காட்டினார். ஆனால் அம்மாளிகையில் இருக்கும் பெரிய அதிகாரிகளுக்கு அது பெரிய அதிசயமாக இருந்தது.

முன்னர் வைஸ்ராய் மாளிகையாக இருந்த கவர்னர் ஜெனரல் மாளிகையில் இதுவரை பரம்பரையான பணத்திமிர் அதிகார மமதைகளைப் பின்பற்றியே பழக்கவழக்கங்கள் சம்பிரதாய முறைப்படி அனுஷ்டிக்கப்பட்டு வந்தன. நேற்றிரவு தமிழ் மகனான கவர்னர் ஜெனரல் ராஜாஜி இச்சம்பிரதாய முறையைத் தகர்த்தெறிந்து மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு இல்லையென்ற தமிழர் மரபை நிரூபித்துக் காட்டினார்.

கவர்னர் ஜெனரல் படக்காட்சி பார்ப்பதற்கெனவுள்ள படக்காட்சி மாளிகையில் நேற்றிரவு 'சாம்ராட் அசோகர்' என்ற படக்காட்சி காண்பிக்கப்பட்டது. அதற்கு கவர்னர் ஜெனரல் வருகையை எதிர்பார்த்து அவரது மெய்ப் பாதுகாவலரும் மற்ற அதிகாரிகளும் காத்துக்கொண்டிருந்தனர். பரம்பரையான ஆடம்பர சம்பிரதாய முறைகளைப் பாதுகாத்து வரும் அவர்கள் கவர்னர் ஜெனரல் ராஜாஜி வருவதைப் பார்த்து திடுக்கிட்டுப் போனார்கள்.

ராஜாஜி மற்ற கவர்னர் ஜெனரல்களைப்போல மிடுக்கும், முறுக்கும், படாடோபமுமின்றி இடுப்பில் கதர் வேஷ்டியுடனும் தோளில் கதர் துண்டுடனும் தனது புத்திரியுடன் படமாளிகைக்கு வந்தார். அவருடன் மாளிகையைச் சேர்ந்த சேவகர்களும் [பியூன்கள்] சமையல்காரர்களும் (வேலைக்காரர்கள்) பட்டி வாலாக்களும் சமயல்காரர்களும் மோட்டார் டிரைவர்களும் அவர்களது மனைவிகளும் குழந்தைகளும் வந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்டதும் அதிகாரிகளுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தங்கள் ஜனநாயகத் தலைவனால் அழைத்துவரப்பட்ட இந்த ஏழைத் தோழர்கள் கூட்டந்தான் கவர்னர் ஜெனரல் மாளிகையின் படக்காட்சிசாலையில் நிறைந்திருந்தது. அவர்களுக்குப் பின்னால் ராஜாஜியும் ஓர் ஆசனத்தில் அமர்ந்து "சாம்ராட் அசோகர்" [சினிமாப்] படக்காட்சியைப் பார்த்தார்.

எதிர்க்கட்சிகளை மடக்க பிரதம மந்திரி தந்திரம்

புதிய இல்லத்தில் ஆடம்பர விருந்து

பாராளுமன்ற எதிர்க்கட்சி அங்கத்தினர்களின் பகிஷ்காரம்

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, நவ. 25

பாராளுமன்றத் திறப்புவிழாவைக் கொண்டாடும் முகமாக இன்று மாலையில் இலங்கைப் பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயகாவும் பாரியாரும் "டெம்பிள் ட்ரீஸ்" என்னும் மந்திரி மாளிகையில், பாராளுமன்ற அங்கத்தவர்களையும் அவர்கள் மனைவியரையும் ஓர் தேனீர் விருந்திற்கு அழைத்திருக்கிறார்கள்.

முன்போல் இவ்விருந்திற்கும் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் செல்லமாட்டார்கள் என அறியப்படுகிறது.

எதிர்க் கட்சி அங்கத்தவர் இவ்விருந்தை மறுப்பதற்குத் தக்க காரணமும் கூறுகிறார்கள். ஒரு நாட்டின் பிரதம மந்திரி என இருப்பவர், இந்திய மகாராஜாக்களையும் கைத்தேச சக்கரவர்த்திகளையும் போன்று படாடோபங்கள் இன்றி பொது மக்களின் தலைவனாக இருக்கவேண்டும் என்பதே அவர்கள் கூறும் முக்கிய காரணமாகும்.

இன்னும் ஜனநாயக அரசியலில் பிரதம மந்திரி என இருப்பவர் தொடர்ந்து இவ்விதராஜ உபசாரங்களில் பொருள் விரையஞ் செய்வது முறையல்லவென்றும் கருதுகின்றனர். ஒரு வேளை இது சேனநாயகாவும் அவரது சகாக்களும் வெளியுலகிற்கு யூ. என். பி. அரசாங்கத்திற்கும், அவர்கள் கொள்கைகளுக்கும் இலங்கையில் எதிர்ப்பு இல்லை என்று காட்டத்தான் இவ்விதம் செய்கின்றனரோ என்றும் எதிர்க்கட்சியினர் ஐயுறுகின்றனர்.

எதிர்க் கட்சி அங்கத்தினர் ஒருவர் எமக்குப் பின்வருமாறு சொன்னார்:-

"ஒரு ஏழைபானவன் ஆனால் திறன் மிகுந்தவன் இலங்கையின் பிரதம மந்திரியாக வந்தால், அவன் இவ்விதமான ராஜ விருந்துகளைச் செய்வதற்கு எங்கிருந்து பணம் பெறக் கூடும்?

மேலும் அவர் கூறியதாவது:-

பாராளுமன்றம் கூடி மந்திரி சபையில் நம்பிக்கையைத் தெரிவிப்பதற்கு முன்னதாகவே மந்திரி வசிப்பதற்கு "டெம்பிள் ட்ரீஸ்" என்னும் மாளிகையை பெருஞ் செலவில் அரசாங்கத்தைக்கொண்டு திருத்தியமைத்துவிட்டார் இது பாரதூரமான குற்றமாகும். அந்த மாளிகையில் நடக்கும் விருந்திற்கு நாம சென்றால் திரு சேனநாயகாவின் குறறத்தை மன்னித்ததாகவே முடியும்."

திரிகோணமலையில் கற்குடா பிரதிநிதி ஓட்டம்!

திரிகோணமலை, நவ 24

நேற்று மாலையில திரிகோணமலை பெரிய மைதானத்தில் நடந்த ஒரு கூட்டத்தில பாராளுமன்றத்தில் கற்குடாப் பிரதிநிதியாக இருக்கும் திரு வி. நல்லையா பேச எழுந்ததும் ஆயிரக்கூடியிருந்த மக்கள் அவரைப் பேசவிடாது கூக்குரலிட்டும், ஆர்ப்பாட்டஞ் செய்தும் தடுத்தனர். திரு நல்லையாவை மேடையைவிட்டு அகன்றுவிடும்படியும் பலவந்தப்படுத்தினார்கள் திரு நல்லையா தப்பினேன் பிழைத்தேனென்று அவ்விடத்தைவிட்டு காரில் ஏறிச் சென்றார்.

இக்கூட்டத்திற்கு ஸர் இராமச்சந்திரன் தலைமைவகித்தார்.

கத்தியால் வெட்டி படுகாயம் விளைத்தாராம்

எதிரிக்கு ரூ. 5000 பிணை

அனலை தீவு, நவ. 24

அனலை தீவு கணபதிப் பிள்ளை பழனியென்பவர் சென்ற தீபாவளித் தினத்தன்று அதே ஊரைச் சேர்ந்த சுப்ரமணியம் நாகலிங்கம் என்பவரை கத்தியால் வெட்டி படுகாயம் வருவித்ததாகக் குற்றஞ் சாட்டி ஒரு வழக்கு ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. மாஜிஸ்டிரேட் எதிரியை ரூ. 5000 பிணையில் விட்டு விசாரணையை ஒத்திவைத்தார்.

ஜீப் தாக்கியதால் மரணம்

கொழும்பு நவ. 24

கொஸகொடை போலீஸ் பகுதியில் தலங்கம என்னுமிடத்தில் எம். டி. டேவிட் என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த ஒருவரால் ஜீப்பால் அடிக்கப்பட்டதால் நேற்று மரணமடைந்தார் என்று கூறப்படுகிறது. இவரைத் தாக்கியவர் என்று கூறப்படுவர் கைது செய்யப்பட்டு போலீஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

லொறிக்கு சிறுவன் பலி

கொழும்பு, நவ 24

வெளிமடை - பண்டாரவளை வீதியில் ஒரு சிறுவன் விவசாய இலாகா லொறியொன்றினால் மோதுண்டு ஸ்தலத்திலே மரணமடைந்ததாக அறிவிக்கப்படுகிறது. விசாரணை நடத்தப்பட்டு லொறி டிரைவர் லொறியுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்

வெள்ளவத்தை - பர்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆன் முறை நிலைக்கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்தற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ	2-00
3 மாதம்	ரூ.	6-00
6 மாதம்	ரூ.	12-00
12 மாதம்	ரூ.	24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A தடாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN"
194 ஏ, தடாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411

செவ்வாய்க்கிழமை கார்த்திகை மீ 10உ
செவ்வாய்க்கிழமை

ஏன் இந்த நீலிக்கண்ணீர்?

தமிழர் தனியாட்சி நாடு பெற்றால் அவர்களது பொருளாதார நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடுமா? இது ஒரு தக்க கேள்வி இந்நாட்டின் பொருளாதார வருவாய் முழுவதும் ரப்பர், தேயிலை, தெங்குப் பொருள் ஆகிய மூன்றிலுந்தான் முக்கியமாக தங்கியிருக்கின்றது. ரப்பரின் நிலைமையோ மிகவும் மோசமாகவருகின்றது. அரசாங்கத்தின் பண உதவி இல்லாவிட்டால் அதை உற்பத்திபண்ணுவதையே நிறுத்தியிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கக்கூடும். அத்துடன் யுத்தமும் ஒரு அளவில் உதவி செய்தது ஆனால் யுத்த காலம் ஒழிந்துவிட்டது. சிங்கப்பூர் முதலிய இடங்களில் மீண்டும் ரப்பர் உற்பத்தி தொடங்கிவிட்டார்கள். விஞ்ஞானிகள் செயற்கை ரப்பரையும் மிகவுயர்ந்த தரத்தில் தயாரிக்கும் வசதிகளும் உண்டு. ஆகவே ரப்பரின் வருவாய் குறைபடத்தான் செய்யும்.

தேயிலையால் இன்று இலங்கைக்கு வருவாய் அதிகம் உண்டு. தேயிலைத் தோட்டங்களை வைத்திருந்தவர்கள் ஆங்கிலேயர்கள். இவர்கள் சொல்பரிந்த திட்டம் இலங்கைக்கு வழங்கப்பட்டது. தங்கள் தோட்டங்களை சிங்கள முதலாளிகளுக்கு விற்றுத் தெடங்கிவிட்டார்கள் விற்றபின் வெளியேறுபவர்கள் லண்டனில் சென்று சுகசீவியம் நடத்துகிறார்களா? இங்கே அஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் குடியேறுகிறார்கள். ஆங்கு தேயிலைத் தோட்டங்களை ஏராளமாகவும் உண்டாகத்தான் செய்கிறார்கள். ஆதலின் இன்றைக்கோ இன்னும் சில காலங்களின்பின்போ ஆங்கு உற்பத்தி செய்யப்படும் தேயிலை, உலகமார்கெடுக்கு வரத்தான் செய்யும் இன்மேலாக வருங்காலத்தில் இங்குள்ள தேயிலைத் தோட்டங்களில் உற்பத்தியும் குறைவதற்கு அறிகுறிகளும் காணப்படுகின்றன. தேயிலைத் தோட்டங்களில் இன்று வேலை செய்பவர்கள் அத்தனை பேரும் இந்தியத் தமிழர்கள் இலங்கை மந்திரிகளின் கொள்கையோ 'கடைசி இந்தியன் இலங்கைக் கரையையிட்டு அகலும்போது நியாயமாக இறப்பதாகும்"! சிங்கள முதலாளிகள் அத்தனை பேரும் இவர்களுக்குப் பந்தம் பிடிப்பவர்களாவர். ஆகவே உருளவெள்ளித் தோட்டச் சமபவம்தான் எல்லாத் தோட்டங்களிலும் நடந்தேறப் பார்க்கள் ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் இன்று விழி பிதுங்கிவிட்டார்கள். இவர்கள் விரட்டுவதற்கு முன்பு தாமாக விலகிக் கொள்ளவும் செய்வார்கள் சுதந்திர இந்தியாவே தொழிலாளர்கள் இங்கு வருவதையும் நிறுத்தி வைக்கக்கூடும். இந்தியத் தொழிலாளர் அன்று சிங்களத் தமிழ் முதலாளர் வைக்கப்பட்டால் நடப்பது எவ்வொருக்கும் தெரிந்த காரியந்தானே! சிங்களத் தொழிலாளர்கள், சேரம்பிறிந்தனமுள்ளவர்கள். இதை நாம் குண்டசாலை உருளவெள்ளி, மவுண்டவேமரி முதலிய அரசினர் தோட்டங்களில் மிகவும் சமீபத்தில் கண்டிருக்கலாம். காலத்தியிலும் தயிலை உற்பத்தி ஸ்தாபிதத்திலிடவும் கூடும்.

தேங்குப் பொருள்களை எடுத்துக் கொள்ளுவோம். தேங்காய் எண்ணெயக்குப் பதிலாக இப்பொழுது மேல் நாட்டவர்கள் நிலக்கடலை எண்ணெயை உபயோகிக்கிறார்கள் நிலக்கடலை ஏராளமாக ஆப்பிரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் ஆங்கிலேயரால் உற்பத்தி செய்யப்படுகின்றது இந்தியாவிலதென் ஆற்காடு ஜில்லாவிலே கூட இந்தியர்களும் ஏராளமான ஏக்கர்களில் இதைப் பயிரிடுகிறார்கள். தேங்காய் எண்ணெய் வருவாயும் எதிர்காலத்தில் குன்றத்தான் செய்யும் கொப்பரையும், தேங்காயும் தான் வெளிநாடுகளுக்கு அனுப்பக்கூடியதாகவிருக்கும் இலங்கை அதிகமாக வாங்குபவர்கள் இந்தியர்கள்தான். இந்தியர்களை மீது இலங்கைச் சிங்கள மந்திரிகள் காட்டும் அன்பு எத்தகையதென்பது நாம் அறிந்ததே இந்த நிலையில் அயல்நாடு இப்பொருள்களை வாங்க மறுக்கவும் கூடும்.

ஆகவே டைம்ஸ் பத்திரிகையர் தேயிலை, ரப்பர், தெங்கு பொருள்கள் தான் எதிர்காலத்தில் தமிழருக்கு பொருளாதார க்ஷேமத்தைக் கொடுப்பதென்று நீலிக் கண்ணீர் வடிப்பது பெருந்தவறாகும். இதை நாம் தமிழர் இருப்பதும் கெடுதியானதாகும்.

முனிஸிபல் சபை வரவு செலவுத் திட்டம்

கொழும்பு, நவ 24

கொழும்பு முனிஸிபல் சபையின் 1948-ம் வருட நகர் வரவு செலவுத் திட்டம்பற்றி டிஸம்பர் 10-ம் தேதிக்குள் விவாதத்துக்கு எடுக்கப்படுமென்று தெரிகிறது. இம்முறை அதிகரித்துள்ள செலவுபற்றி இரு கட்டத்தில் விவாதிக்கப்படும்

முனிஸிபல் சபை சம்பளவகையாக கடந்த வருடத்தில் ரூ. 1789579 செலவிட்டுள்ளது 1948-ம் வருடத்தியநகர் திட்டத்தில் ரூ 2,676793 செலவேற்படுமென்று தெரிகிறது கடந்த வருடத்தில் யுத்தப் படி போகுவரத்துப் படி, வாடகைப் படி ஆகியவைகளுக்கு மாத்தமாக ரூ 974 593 செலவிடப்பட்டுள்ளது 1948 வருடத்துக்கு சுமார் ரூ 1,658 92 செலவேற்படுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. தெழிலாளர்களுக்கு 1946-ம் வருடத்து ரூ. 208,818 சம்பளமாகக் கொடுக்கப்பட்டது 1948-ம் வருடத்துக்கு அதன்தொகை ரூ 462,254 ஆக கூடிவிட்டது. முனிஸிபல் அதிகாரிகளுக்கு ரயில் கட்டணங்கள், இலவச டிக்கட்டுகள் முதலியனவுக்கு 1946-ம் வருடத்து ரூ. 21576 செலவிடப்பட்டுள்ளது 1948 வருடத்துக்கு ரூ 55 000 ஆக கூடிவிட்டது 1946-ம் வருடத்தில் உண்டையாக சம்பளம், படிகள், ரயில்வே கட்டணங்கள் முதலியவுக்கு சுமார் ரூ 3077 626 செலவிடப்பட்டுள்ளது. ஆனால் 1948-ம் வருட நகர் திட்டப்படி ரூ 4,912,873 ஆகும் 1948 வருடத்துக்கு கிடைக்கும் என உத்தேசிக்கப்பட்டுள்ள வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கு இந்த ஐந்து பகுதிகளுக்கும் செலவாகுமென்று கணிக்கப்படுகிறது.

முனிஸிபல் சபையின் புதிய வேலைகள், அபிவிருத்தி வேலைகள் முதலியனவுக்கு கடன் எடுக்கப்படுமென்று தெரிகிறது. கிரில்லப்பொனை வீடுத்திட்டத்துக்கு ரூ. 1,333.33 முனிஸிபல் சபை ஒதுக்கியிருக்கிறது. இதில் மிகுதி செலவு (சுமார் மூன்றில் இரு பங்கு பணமும்) மத்திய சர்க்காரால் கொடுக்குமென்று தெரிகிறது வெள்ளவத்தை வீடமைப்புத் திட்டத்துக்கும் முனிஸிபல் சபை ரூ. 384000 ஒதுக்கியுள்ளது.

மடகாஸ்கரில் புரட்சி

பாரிஸ், நவ. 23

மடகாஸ்கர் தீவிலுள்ள டானனரிவ், பஜோங்கா ஆகிய இரு நகரங்களில் சுதேசிகள் புரட்சி செய்ததால் 50 பேர்களை பிரஞ்சு போலிசார் கைது செய்தனர். [ராய்டர்]

இந்திய விமானப் படையினர் தீரம்

"காஷ்மீர் போரில் அவர்கள் சேவை அபாரமானது"

பண்டித நேரு பாராட்டு

ஸர். தேஜ் பகதூர் சாப்ரு அறிக்கை

புதுடில்லி, நவ 22

காஷ்மீரைப் பாதுகாப்பதிலும் இந்திய மக்களுக்கு தங்கள் பலத்திலுள்ள நம்பிக்கையை அதிகரிப்பதிலும் நீங்கள் செய்த அபாரமான சேவையைப் பாராட்டவே நான் இங்கு வந்திருக்கிறேன்." என்று பண்டித நேரு காஷ்மீருக்கு துருப்புகள் தளவாடங்கள் கொண்டு போவதில் ஈடுபட்டுள்ள விமானிகள், விமான ஊழியர்களுக்கு இன்று காலை செய்த பிரசங்கமாவதில் கூறினார்.

பண்டித நேரு காஷ்மீருக்கு உதவி செய்ததன் காரணங்களை விளக்கி மேலும் சொன்னதாவது:-

காஷ்மீருக்குச் செல்லும் எல்லா வழிகளும் எதிரியின் வசமிருந்தன. அந்த சமயத்தில் நீங்கள் முழு மூச்சுடன் வேலையில் ஈடுபட்டு உதவி செய்கிறீர்கள் விடில் காஷ்மீரை காப்பாற்றி இருக்க முடியாது.

காஷ்மீர் நடவடிக்கைகள் ரொம்ப சிரமமானவை இந்திய விமானிகள் துணிச்சலுடனும், திறமையுடனும் வேலை செய்தனர். காஷ்மீரில் அவர்கள் செய்த சேவை தங்கள் விமானப் படை ஒரு அவசர நிலைமையை சமாளிக்கவல்லது என்பதை இந்திய மக்கள் உணரும்படி செய்து விட்டது.

உலகில் எந்த நாட்டு விமானப்படைக்கு சேர்ந்த விமானிகளுக்கும் நமது விமானிகள் தாழ்ந்தவர்களல்ல ஆனால் போதிய விமானிகள் இல்லை இளைஞர்களை பயிற்றுவிக்க முயற்சி எடுக்க வேண்டும்.

இந்தியாவில் சீக்கிரம் விமான உற்பத்தி

விமானங்களை வாங்க முடியும். இந்தியாவிலேயே சீக்கிரத்தில் விமான உற்பத்தி ஆரம்பிக்கப்படும் என நம்புகிறேன் ஆனால் போதிய விமானிகளையும், சிப்பந்திகளையும் பயிற்றுவிப்பது சிரமமான வேலை

இந்திய விமானங்கள் சென்ற மூன்று வாரங்களில் டில்லிக்கும் காஷ்மீருக்குமிடையே 750 தடவை பறந்திருக்கின்றன 30 லக்ஷம் ரூக்தல் எடையை சுமந்து சென்றன மொத்தம் 6 லக்ஷம் மைல்கள் பறந்திருக்கின்றன இந்த விபரத்தை நேரு வெளியிட்டார்.

சப்ரு மகிழ்ச்சி

அலகாபாத் நவ, 22

ஸர். தேஜ் பகதூர் சப்ரு பத்திரிகைளுக்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் காஷ்மீர் மக்களின் நிவாரணத்திற்கு ஜாதி மத வேற்றுமையின்றி எல்லோரும் உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார் நிவாரணத்திற்கு ஏற்றாடுகளைச் செய்ய ஒரு மதிய அமைச்சரவை அலகாபாத்தில் அமைக்கப்பட்டு வருவதாக அவர் அறியிருக்கிறார்.

உடனடியாக எத்தகைய உதவி தேவையென்றதை அறிந்து கொள்வதற்காக ஸர் தேஜ் பகதூர் சப்ரு பண்டித நேருவுடனும் ஷேக் அப்துல்லாவுடனும் காஷ்மீர் மகாராஜாவுடனும் தொடர்பு ஏற்படுத்தியிருக்கிறார்.

சரித்திரம் காணாத துரோகம்

சர் சப்ரு தனது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது: அபிரிடியர் காஷ்மீர் மீது படையெடுத்த விவரங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாயிருக்கின்றன. ஆக்ரமிப்பாளர் விரட்டியடிக்கப்பட்டு வருவதுபற்றி சந்தோஷப்படுகிறேன் காஷ்மீரின் சரித்திரத்திலேயே அதன் மக்களுக்கு இம்மாதிரியான துரோகம் செய்யப்பட்டதில்லை. காஷ்மீரின் உள்நாட்டுப் பகுதியிலே பிரவேசித்துள்ள ஆக்ரமிப்பாளரை ஒழிக்குக் கட்டுவது சற்று சிரமந்தான் காஷ்மீரில் பழைய நிலைமை ஏற்படுதுவதற்குப் பல மாதங்களாகும். சில அரசியல் வாதிகளின் தூண்டுதலின் மீது தான் இந்த படையெடுப்பு நடந்திருக்கிறது பாமுலா பட்டினத்தில் 15000 ஜனங்களில் 4000 பேர் கொலை செய்யப்பட்டனர் ஆக்ரமிப்பாளர் காஷ்மீரை ஆக்ரமித்திருந்தால் பயங்கரமான நிகழ்ச்சிகளும் படுகொலைகளும் நிகழ்ந்திருக்கும்.

மத்திய சர்க்கார் தகுந்த சமயத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்ததால் காஷ்மீர் காப்பாற்றப்பட்டது. மத்திய சர்க்காருக்கும் அதன் ராணுவத்திற்கும் விமானப் படைக்கும் நன்றி தெரிவிப்பதாக இந்தியாவில் வசிக்கும் காஷ்மீரிகளும் காஷ்மீர் நலனில் சிரத்தையுள்ள இந்தியர்களும் முன்னிலையில் நடுங்கும் காஷ்மீர் மக்களுக்கு கம்பளி முதலிய உடைகளையும் மற்ற உதவிகளையும் அளித்து உதவ முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன். காஷ்மீர் மக்கள் நலனில் சிரத்தையுள்ள வேறிடங்களில் உள்ள நண்பர்களும் நிவாரண கமிட்டிகளை அமைத்து உதவி அனுப்ப ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்

இந்த நெருக்கடியான சமயத்தில் ஷேக் அப்துல்லா காஷ்மீர் தலைவராக முன்வந்து அந்நாட்டின் பாதுகாப்பு பொறுப்பை ஏற்றுக்கொள்ள முன்வந்திருப்பது குறிப்பிடத் தகுந்தது

அட்டூழியங்களைக் காட்டும் பிலிம் தயாராகிறது

ஸ்ரீநகர், நவ. 22

சென்ற இரண்டு வாரங்களாக காஷ்மீரில் நடந்த சம்பவங்களைக் காட்டும் டாக்குமென்டரி பிலிம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் இப்படம் காட்டப்படும்.

சுதந்திர காஷ்மீர் சர்க்கார் எனப்படும் பாகிஸ்தான் பொய் சர்க்காரின் "விடுதலை" படையினர் காஷ்மீரில் குறிப்பாக பாமுலாவில் செய்த படுநாசத்தை இப்படம் காட்டுமாம். ரிகார்டிங் இன்னும் இதர வேலைகளுக்காக படம் பம்பாய்க்கு கொண்டுபோகப்பட்டிருக்கிறது.

ஷேக் அப்துல்லா சர்க்காரின் நடவடிக்கைகள், தேசிய மகாநாட்டு தொண்டர் படையின் சேவைகளையும், பண்டித நேருவின் விஜயத்தையும் இப்படத்தில் காணலாம்.

குடியிருப்பு வரிக்கு கிளர்ச்சி

வாழைத்தோட்டத்தில் கூட்டம்

கொழும்பு, நவ. 24

நேற்று வாழைத்தோட்ட மைதானத்தில் நடைபெற்ற ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் "வீடுகளை அதிகரித்து வாடகையைக் குறைக்க வேண்டும்" என்று ஓர் பலமான கிளர்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. குடியிருப்புப் பிரச்னையைப்பற்றி பாராளுமன்ற முனிஸிபல் சபை அங்கத்தினர்கள் பேசினர்.

திரு ஜீவரத்தினசிங்கம் தலைமை வகித்தார்.

டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா பேசுகையில் யுத்தகாலத்தில் நெருப்பொழிவில் துருப்புகளின் உபயோகத்திற்காக கட்டிடங்கள் அமைக்கப்பட்டுவந்ததை சுட்டிக்காட்டி பொது மக்களது சேவைக்காக ஏன் அத்தகைய தரித்த மனப்பான்மையை அரசாங்கம் காட்டவில்லை எனக் கேட்டார். இன்றைய பொது மக்களின் அவசிய தேவையாக பத்தாயிரம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்றும் அது செய்யப்படாவிட்டால் தனவந்தர்கள் வசிக்கும் கறுவாக்காட்டில் உள்ள இடங்களில் பொது மக்கள் குடியேறி அவற்றைக் கைப்பற்றுவர் எனவும் எச்சரித்தார்.

கிருபீட்டர்கெனமன் அதன் பின் பேசுகையில் செல்வந்தர்கள் வீட்டு நாயும் பூனையும் அனுபவிக்கும் குடியிருப்பு வசதியில் ஒரு பங்குதானும் இல்லாது பொது மக்கள் கஷ்டப்படுகின்றனர். இந்நிலைமையை போக்கடிக்க வேண்டுமானால் நாட்டின் மூலை முடுக்கெங்கும் ஆர்ப்பாட்டக் கூட்டங்களை நடத்தி தீவிர கிளர்ச்சிசெய்ய வேண்டும் என வற்புறுத்தினார்.

டாக்டர் குமாரன் ரத்னம், எம் ஜி மெண்டிஸ், டி நுகரா, ஜே எம். ஞானப்பிரகாசம் முதலிய பலர் அதன் பின் பேசினர்.

உணவுக் கட்டுப்பாட்டிலாகா குமாஸ்தா மீது வழக்கு

அரிசிக் கூப்பன்களில் மோசடி செய்தாராம்

கொழும்பு, நவ 24

உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவில் குமாஸ்தாவாக வேலை செய்த ரக்கினபுரியைச் சேர்ந்த பல்வாகியா வாசியான ஒரு டொன் ஜேம்ஸ் டி சில்வா ரணவீரா என்பவர் இவ்வருடம் மார்ச்சு மாதம் 19-ம் தேதி 11 அரிசி ரேஷன் புத்தகங்களை மோசடி செய்ததாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு தற்காலீக பிரதம நீதிபதி சிரு வி டி பண்டிதகுணவர்தனமுன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது எதிரியின் கையெழுத்து 25 மாதிரி எடுக்கப்பட்டது வழக்கு டிஸம்பர் 12-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது

பொருளாதார நெருக்கடியால் தற்கொலை

காலி, நவ. 24

காலிமோட்டார்பஸ்கம்பெனி லிமிட்டெட் பங்குதாரர் ஒருவரான திரு லோகன்பட்டே சிரிசேனா என்பவர் வெள்ளிக்கிழமை காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கே அவர் மரணமடைந்தார் இவர் உண்டிருந்த நஞ்சே இவரது மரணத்துக்கு காரணம். காலஞ் சென்றவர் அவரது மனைவிக்கு எழுதிய கடிதத்தில் தமது பொருளாதார நிலை காரணமாக ஏற்பட்ட மன வெறுப்பால் தாம் தற்கொலை செய்து கொள்வதாக குறிப்பிட்டுள்ளார் என்று கூறப்பட்டது. மரண விசாரணை அதிகாரி தற்கொலைபால் மரணம் நேர்ந்ததென தீர்ப்பளித்தார்.

இலங்கையில் புதிய தபால் முத்திரைகள்

கொழும்பு, நவ. 25

புதிய அரசியல் திட்டம் புகுத்தப்படுவதை முன்னிட்டு இன்று புது வித தபால் முத்திரைகள் மத்திய தபால் கந்தோரில் விநியோகிக்கப்படும் என்று தெரிகிறது.

குமார வீதியில் உள்ள தபால் ஆபீஸிலும் இப்புதிய முத்திரைகள் விற்கப்படும்

பிரிட்டனில் பெரும் மழையும், புயலும்

ஸ்காட்லந்து மலைப்பிரதேச ரஸ்தாக்களில் மலைச் சரிவுகள்

வேல்ஸில் வெள்ளக்காடு

லண்டன், நவ. 23

பிரிட்டனில் இவ்வாரக்கடையில் பெரும் புயல்காற்று அடித்ததாலும் கனத்த மழை பொழிந்ததாலும் பெரும் சேதங்கள் ஏற்பட்டன. ஸ்காட்லந்து மலைப்பிரதேசங்களில் அபரிமிதமான மழை பெய்ததால் ஸ்காட்லந்து ரஸ்தாக்கள்மீது மலைச்சரிவுகளும் மண்சரிவுகளும் ஏற்பட்டு பாதைகளை அடைத்துக் கொண்டன.

மிகசார உற்பத்தி நிலையங்களுக்குப் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. ஸ்காட்லந்திலுள்ள உயர்ந்த பகுதிகளில் ரஸ்தாக்களில் 3 அங்குல உயரத்திற்கு பனிக்கட்டி மூடிக் கொண்டிருக்கிறது சூறாவளிகளாலும் புயல்காற்றுகளாலும், மழைபாலும் வேல்ஸ் பிரதேசத்தில் மத்திய பகுதியெலாம் அவலக்காலமாய்க் கிடக்கின்றன. எங்குபார்த்தாலும் வெள்ளக்காடாக இருக்கிறது. மாண்ட்கோமரிகுமெரியானத்துக்கு மிடையேயுள்ள பிரதம ரஸ்தா வெள்ளத்தில மூழ்கியிருப்பதால் போக்குவரத்து செய்யமுடியாது. இந்த இரு யார்க்ஷயர் நகரங்களுக்கு மத்தியில் வெள்ளத்தால் நான்கடி உயரத்திற்கு தண்ணீர் பெருகியுள்ளது.மற்ற ரஸ்தாக்களில 18 அங்குல உயரத்திற்கு வெள்ளம் பெருகியிருக்கிறது.

அயர்லாந்திலுள்ள பெல்மாண்ட நகரிலிருந்து கார்டிவ நகரத்துக்கு உருளைக் கிழங்கை ஏற்றிவந்த கப்பல் புயலால் ஐரிஷ் கடலைக் கடக்கமுடியாமல் ரோஸ்லேர் துறைமுகத்தில் வந்து பதுங்கியிருந்தது. மற்றும் அநேக கப்பல்கள் பக்கத்துத் துறைமுகங்களில் வந்து பதுங்கின. இதற்கிடையே லண்டனில் மட்டும் நவம்பர் மாதத்தில் சிதோஷ்ண நிலைமைக்குப் புறம்பாக அசாதாரணமான நிலைமை இருந்துவருகிறது.

(ராய்ட்டர்)

இந்தோனேஷியா

மூவர் கமிஷன் ஆதாவில் இரு கமிட்டிகளின் கூட்டம்

டச்சு துருப்புகள் ஜாவாவுக்கு இன்னும் அனுப்பப்படுகின்றன

டிசம்பர் 2-ம் தேதி அமெரிக்க கப்பல் வரும்

லண்டன், நவ 23

ஹேக் நகரிலிருந்து இற்கண்ட செய்தி கிடைத்ததாக மான்கோ ரேடியோ தெரிவிக்கிறது:- சென்ற 20 தினங்களில் முன்று கப்பல்கள் 3200 டச்சுத் துருப்புகளை ஏற்றிக்கொண்டு இந்தோனேஷியாவுக்குச் சென்றன

இந்தோனேஷியாவிலிருந்து கீழ்க்கண்ட செய்தி கிடைத்திருப்பதாகவும் மான்கோ ரேடியோ தெரிவிக்கிறது:- இந்தோனேஷியாவில் இப்பொழுது ராணுவ அதிகாரிகளுக்கு சோல்ஜர்களாக டச்சு ராணுவத்தில் 40,000 பேர்கள் இருக்கிறார்கள் 1946 அக்டோபர் மாதத்திலிருந்ததைவிட இப்பொழுது 30,000 பேர்கள் அதிகமாக இருக்கிறார்கள். சமீபத்தில் 15 000 டச்சுத் துருப்புகள் ஹாலந்திலிருந்து ஜாவாவுக்கு அனுப்பப்பட்டன

அமெரிக்க கப்பல்

பட்டேவியா, நவ. 23

ஐக்கிய தேச பாதுகாப்பு நியமித்த மூவர் மத்யஸ்த கமிஷன் இந்தோனேஷிய-டச்சு சமாதானம் சம்பந்தமாக இருதரப்பாரும் பொதுவாகவுள்ள கடலில் நடுவே கப்பலிலிருந்த சமாதானப் பேச்சு நடத்த அமெரிக்கா அனுப்பிவைக்கும் கப்பல் டிசம்பர் 2-ம் தேதி பண்டுங் ஜாவாவுக்கு வந்து சேருமென்று அறிவிக்கிறது.

மூவர் மத்யஸ்த கமிஷன் முயற்சியால் நிறுவப்பட்ட டச்சு மிலிட்டியும் இந்தோனேஷியா மிலிட்டியும், இரு தரப்பிலும் கைது செய்யப்பட்ட வர்களை விடுதலை செய்யவும், புரட்சி, கலகம், பயமுறுத்தல், பழிக்குப்பழி வாங்குதல் ஆகிய காரியங்களை உடனே நிறுத்துவதாகவும் ஒப்புக்கொண்டன. அடுத்த கூட்டம் வாரக் கடைசியில் நடைபெறும். (ராய்ட்டர்)

யாம் மாஜி பிரதம மந்திரி

சிங்கப்பூர், நவ 23

சயாம் மாஜி பிரதம மந்திரி னம் யாங் சிங்கப்பூருக்கு தப்பி ஓடி வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

(ராய்ட்டர்)

இத்தாலியிலும், பிரான்ஸிலும் கமியூனிஸ்டுகள் சதி

பரிசுத்த பாப்பரசருக்கும் ஆபத்து ஏற்படும் நிலைமை இருந்து வருகிறது

அமெரிக்க மார்ஷல் திட்ட உதவி கிடைப்பதற்குள் இரு அரசாங்கங்களைக் கைப்பற்றிவிட முயற்சி

ஐரிஷ் கத்தோலிக்க மத குருவின் எச்சரிக்கை

கால்வே (அயர்லாந்து) நவ 23

இன்று கால்வேயில் கத்தோலிக்க மத குரு டாக்டர் மைக்கேல் பிரளனி பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இத்தாலியின் எல்லைப்புறங்களில் கமியூனிஸ்ட் படைகளும், இத்தாலியிலும் பிரான்ஸிலும் கமியூனிஸ்ட் ஐந்தாம் படைக் கட்சிகளும் இருந்து வருவதால் பெரும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது பரிசுத்த பாப்பரசருக்குக் கூட இதனால் ஆபத்து ஏற்படும் நிலைமை இருந்து வருகிறது கமியூனிஸ்டுகள் உலகப் புரட்சியை உண்டுபண்ணும் நோக்கத்துடன், இத்தாலியிலும் பிரான்ஸிலும் பொருளாதார நிலை ஏற்படாதவாறு முட்டுக்கட்டை போட்டு, இத்தாலியிலும் பிரான்ஸிலும் வேலை நிறுத்தங்களைத் தூண்டிவிடும், பலாத்காரச் செயல்களை ஏவிவிடும் சதிவலைகளையும் உண்டுபண்ணி வருகிறார்கள். அந்த கமியூனிஸ்டுகளிடம் பணமும் ஆயுதங்களுமிருக்கின்றன ரஷ்யாவை உண்டுபண்ணுவதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இத்தாலிக்கும் பிரான்சுக்கும் அமெரிக்க மார்ஷல் திட்டம் பண உதவி கிடைப்பதற்கு முன்னதாக இவ்விரு நாடுகளின் அரசாங்கங்களைக் கைப்பற்றிவிட கமியூனிஸ்டுகள் திட்டம் போட்டு வேலைசெய்து வருகிறார்கள். கமியூனிஸ்டுகள் பிரஞ்சு அரசாங்கத்தைக் கைப்பற்றிவிடுவார்களேயானால் ரஷியா அயர்லாந்துக்கு கருகேவந்துவிடும். அயர்லாந்தைப்பற்றி ரஷியா எவ்வித எண்ணம் கொண்டிருக்கிறதென்பது அயர்லாந்துக்குத் தெரியும். ஐக்கியதேச ஸ்தாபனத்தில் அயர்லாந்து அங்கத்தினராகச் சேரவொட்டாது ரஷியா எதிர்த்து வந்திருக்கிறது. பிரான்ஸில் கமியூனிஸ்ட் அரசு ஏற்படுமானால் இத்தாலியில் இப்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை அயர்லாந்துக்கும் ஏற்பட்டுவிடும். இத்தாலியின் எல்லையில் பிரமாண்டமான ராணுவத்தையுடைய கமியூனிஸ்ட் நாடான யூகோஸ்லேவியா இருக்கிறது. ரோமாபுரிக்கும் பரிசுத்த பாப்பரசருக்கும் ஏற்படவிருக்கும் ஆபத்தைப் பார்த்துக்கொண்டு ரோமன் கத்தோலிக்கர்கள் சும்மா இருக்கமுடியாது.

மதகுரு டாக்டர் மைக்கேல் பிரேளனி ரோமாபுரி சென்று பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்துவிட்டு கால்வேக்குத் திருமபி வந்ததும் மேற்கூறிய சொற்பொழிவை நிகழ்த்தினார்:

[ராய்ட்டர்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய் திருவல் வர்த்தக இலாபம்

உற்பத்தியாளருக்கு பங்கு கிடையாதென புகார்

கொழும்பு, நவ. 24

தாழ்ந்த பிரதேச வினைபொருள் உற்பத்திச் சங்கத்தின் பொதுச் சமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது தேங்காய்ப்பூ வியாபாரத்தில் கிடைக்கக் கூடிய சுமார் 28 லட்சம் ரூபாய் லாபத்திலும் தொழிலாளருக்கோ உற்பத்தியாளருக்கோ சிறிதளவேனும் பங்கு அளிக்கப்படுவதில்லை யென்றும் அந்த லாபம் முழுமையும் ஐம்பது தேங்காய்ப்பூ அலைக்காரர்களுக்கே போய்ச் சேரவதாகவும் தேங்காய்ப்பூ தொழில் இத்தகைய அவலநிலையில் இருப்பது வருந்தத்தக்கது என்றும் கூறப்பட்டது.

இச்சங்கத்தின் தலைவர் திரு. ஸி. ஏ. எம். டி. சில்வா பேசுகையில் தேங்காய்ப்பூ ஏற்றுமதியில் இடைத்தரகரும் அதிலாபம் சம்பந்தமான தன்தாவேஜுகள் தம்மிடமிருப்பதாகவும் இந்த லாபத்தினை ஆலைக்காரர்கள் எடுக்கின்றார்களேயன்றி அதில் உற்பத்தியாளருக்கோ தொழிலாளருக்கோ பங்கு கொடுக்கப்படாதது அதிக வருத்தத்தைக் கொடுப்பதாகவும் கூறினார். இப்பொழுது ஏற்றுமதி செய்ய ஒதுக்கப்பட்ட 2500 டன் தேங்காய் பூவிலும் சுமார் 28 லட்சம் ரூபாய் இலாபம் கிடைக்குமென்றும் அதனை இப்பது ஆலைக்காரர்களும்தான் எடுத்துக் கொள்வார்கள் என்றும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். மொத்தமாக கிடைக்கும் சுமார் 140 லட்சம் ரூபாய் இலாபத்தில் தோட்டக்காரர்களுக்கோ உற்பத்தி செய்யும் தொழிலாளருக்கோ எவ்விதமாகும் அளிக்கப்படுவதில்லை யென்றும் இந்நிலையைக் சவிர்ப்பதற்கு நிலையான எத்திட்டத்தையும் தாம் ஏற்க இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜூனியர் எச் இஸட் பெர்னாண்டோ பேசுகையில் கட்டுப்பாடுகளை நீக்க வேண்டுமென்றும் கண்டிராக்ட் முறையை தொடர்ந்து வைக்கிறார்பது இத்தொழிலுக்கு ஏற்றதல்ல வென்றும் அரசாங்கம் தேங்காய்ப்பூ ஏற்றுமதியை நடத்த வேண்டுமென்றும் அதனால் கிடைக்கும் அதிக லாபம் அரசாங்கவருமானத்தை அதிகரிக்க உதவுமென்றும் கூறினார் ஆலைக்காரர்கள் இலாபம் பெறுவதில் தாங்கள் பொறாமைப்படவில்லை யென்றும் அவர்கள் பெறும் இலாபத்தில் உற்பத்தியாளருக்கும் பங்கு கொடுக்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

தேங்காய்ப்பூ உற்பத்தியையே இப்பது ஆலைக்காரர்களும் கைபற்றி உற்பத்தியாளருக்கு இலாபத்தில் பங்கு கொடுக்காதுவிடுகிறார்கள் என்று திரு. டபிள்யூ. டி. நிஸி பேசினார் இந்நிலைமையை பரிசீலனை செய்து உடன் நடவடிக்கை எடுக்க ஒரு உபகமிட்டி தெரியப்படுத்தப்பட்டது.

செனட்டர் ஏ. எம். டி. சில்வாவுக்கு பாராட்டு

கொழும்பு, நவ. 24

தாழ்ந்த பிரதேச வினைபொருள் உற்பத்திச் சங்கத்தின் தலைவர் சான் ஏ. எம் டி சில்வா கவர்னரால் செனட்டராக நியமனம் செய்தமை சங்கத்தின் பொதுநிர்வாகசபைக் கூட்டத்தில் சென்ற வியாழக்கிழமை பாராட்டப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் இலங்கை தென்னைப் பொருள் சபைத் தலைவராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் எஸ். பரராஜசிங்கத்திற்குத் தலைவர் தமது வாழ்த்தைத் தெரிவித்தார்.

திரு எஸ் பத்மநாதன் சங்கசார்பில் தேயிலைப் பிரசாரசபையில் அங்கம் வகிப்பதற்காக நியமிக்கப்பட்டார்.

பெண்களும் விவசாயமும்

மூன்று பெண்மணிகள் நிலைமை

கண்டி, நவ 24

பெண்களிடையே விவசாயத் தொழிலைப் பிரபல்யப்படுத்திப் பரவலும் நோக்கத்துடன் விவசாய இலாகா அதிகாரிகள் மூன்று பெண்மணிகளை விவசாயபயிற்சி அளிக்கும் வேலையில் அமர்த்தியுள்ளனர்.

சிங்கள முதலாளிகளைக் காப்பாற்றவே பிரிட்டன் - இலங்கை ராணுவ ஒப்பந்தம்

இடதுசாரிகள் 'தேசத்' துரோகிகள்

இலங்கை இந்தியன் காங்கிரசும், தமிழ்க் காங்கிரசும் சிங்களவரின் பரம சத்துருக்கள்

பொக்கிஷ மந்திரியின் சிங்களப் பத்திரிகை தெரிவிக்கும் அபிப்பிராயம்

(இலங்கைப் பொக்கிஷ மந்திரியின் ஆதரவில் இலங்கைத் தமிழருக்கும், இந்திய துரோகம் ஈராக நடைபெறும் துவேஷப் பிரசாரத்தின் உச்ச நிலையை அடியில் தரகின்றோம். நெஞ்சுவேகள் நினைந்து சிவசிவா என்பவர் போல பொக்கிஷ மந்திரியார் அணிவது தர் ஆடை செய்வது இந்திய துவேஷப் பிரசாரம்.

(ஆ-ர்)

பொக்கிஷ மந்திரி திரு. தே. ஆர். ஜயவர்த்தனவின் "பெரமுன" என்னும் சிங்களப் பத்திரிகை சென்ற வெள்ளிக்கிழமை எழுதிய உப ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம்:

இலங்கையர்களான எங்களுக்கு கூடிய சீக்கிரம் சுதந்திரம் கிடைக்கப் போகிறது. அதன்பின் உலகத்திலேயுள்ள எந்தவொரு மனித வர்க்கத்திற்குப் நம்மை ஆக்கிரமிக்க முடியாது ஒரு சமயம் அப்படி ஆக்கிரமிப்பு ஏற்படுமானால் அது யுத்தமாய்த்தானிருக்கும்.

அப்படியானால், சத்துருக்களின் ஆக்கிரமிப்பை தடுத்து நாட்டைக் காப்பாற்றக் கூடிய பலம் எமக்கு கிடையாது என்பது உண்மை. அனபடியால் தான் சத்துருக்களின் ஆக்கிரமிப்பிலிருந்து, நமது சிறிய நாட்டை காப்பாற்றவதற்கு வேண்டியே இங்கிலாந்துடன் உடன்படிக்கையில் சேர்ந்து கொண்டோம்.

அப்படி நாம் இங்கிலாந்துடன் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறோமெனினும், எங்களை இந்தியாவிற்கு காட்டி கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன. இம்முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இங்குவந்து, அந்நாட்டு பாஷை- மத வழக்கங்களையுடைய சுமார் 20 லட்சம் தொகையைக் கொண்ட கூட்டத்தார்களாவர். இவர்கள் இதேசத்தின் ஜனத் தொகையிலிருந்து மூன்றிலொரு பங்கினர். எஞ்சிய மூன்றிலிரு பங்கினரான சுமார் 45 லட்சம்பேர் சிங்களவராவர். இவர்கள் தமிழர்-முஸ்லிம் ஆகியோர் இத்தேசத்தை வாசபூமியாகக் கொண்டு வாழும் மக்களோடு சமாதானத்தோடும் பரஸ்பர நலனெண்ணத்தோடும் வாழ்ந்து வருகின்றனர்.

எனினும் இந்த சாமக மக்களிடையே வாதபேதங்களையுண்டாக்கி விடுவதற்கு, சில அரசியல் தலைவர்களும் கட்சித் தலைவர்களும் மேலோர் பிரயத்தனங்களைச் செய்கின்றனர். இவர்களில் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் முக்கியமானவர்.

அவர், "திரிகோணமலை தமிழர் காங்கிரஸின் அங்கத்தவர்களுவர் பார்லிமெண்டுக்கு தெரிவு செய்யப்படடிருக்கிற படியாலே திரிகோணமலை தமிழர் காங்கிரசின் கோட்டை" என்று சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார். இந்த அபிப்பிராயத்தை பொன்னம்பலத்தின் சகாவான பார்லிமெண்டு அங்கத்தவர் திரு. எஸ். ஜே வி செல்வநாயகமும் ஆமோதித்து, சிங்களவர்களிடமிருந்து நியாயம் கிடைக்காவிடில், வேறாக ஒரு அரசாங்கத்தை நிறுவ வண்டுமென்று கூறினார். இவரறிவிருந்து இவர்களின் உண்மையான கோட்பாடென்னவென்று தெளிவாகத் தெரிகிறது.

வட மாகாணத்தையும் கீழ் மாகாணத்தையும் இலங்கையின் மற்றப் பகுதிகளிலிருந்து பிரித்து, தென்னிந்தியாவுடன் சேர்க்கும் முயற்சியோடு இவர்கள் கண்மூடித்தனமாக விளையாடுகிறார்கள். இலங்கைத் தமிழர் காங்கிரஸின் இம் முயற்சிக்கு இந்தியன் காங்கிரஸும் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இலங்கை இந்தியன் காங்கிரஸ்காரர்கள், இலங்கைத் தமிழர் காங்கிரஸிலும் பார்க்க சிங்களவர்களின் முன்னேற்றத்திற்கும் உரிமைகளுக்கும் எதிரான சத்துருக்களேயாவர். இவர்கள் சிங்களவர்களின் ராஜதானியான கண்டிப் பிரதேசங்களின் பிரதிநிதியாக பார்லிமண்டுக்கு இந்திய தோட்டக தொழிலாளர்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

சிங்களவர்களின் மூன்றாவது சத்துருக்கள்; ஒரு சமயம் சிங்கள பௌத்தர்களாகவிருந்து, இப்பொழுது ஜாதியையும் சமயத்தையும் மறந்து மார்க்சவாதிகளாய் இருக்கும் இடதுசாரிகளேயாவர்.

இந்த சத்துரு கூட்டத்தாரின் முயற்சியினால், ஒரு சமயம் உலகத்திலேயுள்ள துரதிர்ஷ்டசாலிகளான 40 கோடி தரித்திரக்கார ஜனங்களும் இந்தியாவிலிருந்து இங்கே படையெடுத்து வந்து, இந்நாட்டு விவசாயி-தொழிலாளர்களின் ஜீவனோபாயத் தொழில துறைகளைக் கைப்பற்றிக் கொண்டால், இலங்கையர்களான தொழிலாளி - விவசாயிகளின் கதியென்னா?

எனவே, இவர்கள் சிங்களவர்களல்லாதாரின் நன்மைக்கும் உரிமைக்கும் கூட்டாகச் சேர்ந்து பாடுபடுவார்கள் என்பது நிச்சயம். தமிழர் காங்கிரஸும், இலங்கை இந்தியன் காங்கிரஸும், இடதுசாரிகளும் இவ்வகையில் சிங்களவர்களின் சத்துருக்கள் என்பதில் என்னதற்றப்பீ வரப்போகும் ஆபத்துகளை சிங்களவர் தற்போதுதான் அறிந்து கொண்டிருக்கிறார்கள் ஆகையாற்தான், சதுருக்களும் இவ்விபத்துகளுக்கு முன் நிற்க நிரதமாக ஐக்கியப்படுவருகிறார்கள்.

ஏரியில் தோட்டத் துரையின் பிரேதம்

நூரளை, நவ. 24

நூரளையில் உள்ள ஹரேகா ஏரியில் வயதான ஒரு ஐரோப்பியரின் பிரேதம் கண்டெடுக்கப்பட்டது. புசல்லாவை பகுதியில் உள்ள குடபோலா என்னுமிடத்திய மாஜி தோட்டதுரை திரு. ஜே ஆர் திஸின் என்பவரது பிரேதமென்று போலிஸார் விசாரணையின் போது தெரியவந்தது. இவர் ஓய்வில் இருப்பவராகும் இவர் தமது மனைவிக்கு 20-ம் தேதி எழுதிய கடிதமொன்றில் தாம் தற்கொலை செய்துகொள்வது பற்றி தெரிவித்துள்ளாரென்று கூறப்படுகிறது.

லொறி மோதி மரணம்

கொழும்பு, நவ 25

சனிக்கிழமை பிற்பகல் மழை பெய்துகொண்டிருக்கும்போது ஹோட்டன் பிளேஸில் ஓர் லொறி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அப்போது சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஓர் நபர் அதன் பின் பக்கத்தில அபாயகரமாக மோதிக்கொண்டுவிட்டார். இதன் பலனாக அவர் காயமுற்று ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கே அவர் காலமானார். அவர் வெல்லம்புவையைச் சேர்ந்தவர் என்றும் இவரது பெயர் எச். ஜி எல் பெரேரா என்றும் தெரிகிறது.

ரூ. 60 லட்சம் பெறுமான ஜூனாத் சொத்துக்களை முடக்க இந்தியா உத்தரவு

திவான் பெருந்தொகை 'சுருட்ட' முயன்றது பலிக்கவில்லை!

பம்பாய், நவ. 22

இந்திய ரிஸர்வ் பாங்கி ஜூனாகத் சமஸ்தானத்தின் பெயரில் இருந்த சொத்துக்களனைத்தையும் இந்திய சர்க்கார் "முடக்கி" விட்டனர்.

ரொக்கம், பகிரங்கள் இவற்றில் ரிஸர்வ் பாங்கில் ஜூனாகத் சமஸ்தானத்திற்கு மொத்தம் ரூ.60 00 000 இருந்ததாக நம்பப்படுகிறது.

ஜூனாகத் திவான் ஸர் ஷாநவாஸ் புட்டோ ஒரு பெருந்தொகையை பாங்கிலிருந்து பெறச்செய்த கடைசி நிமிஷ முயற்சி பலனளிக்கவில்லை என்றும் தெரிகிறது.

பிரதமர் நேருவை ஸ்ரீ சாஹாய் சந்தித்தார்

25 வருடமாக ஜப்பானில் இருந்தவர்

புதுடில்லி, நவ 20

நேச்தாஜி சுபாஸ் போஸின் சுதந்திர இந்திய தற்காலிக சர்க்காரில் அங்கம் வகித்தவரான ஸ்ரீ ஆனந்தமோஹன் சாகாய், பண்டித நேருவைச் சந்தித்து நாட்டின் நிலைமை பற்றி விவாதித்தார்.

நாடு கடத்தப்பட்டு 25வருஷ காலமாக ஜப்பானில் ஸ்ரீ சஹாய் வாழ்ந்து வந்தார் என்பது நினைவிருக்கலாம்.

தூர கிழக்குப் பகுதியில் ஏதாவது முக்கிய உத்தியோகம் கொடுக்க ஸ்ரீ சாஹாயின் பெயரை இந்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாக அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இன்று பி. பி. ஸி யில் விசேஷ நிகழ்ச்சி

இலங்கை புதிய அரசியல் சம்பந்தமாக ஒலிபரப்பு

இன்று பி பி ஸி யில் [இலங்கை மணி பிரகாரம் 7-15 பிற்பகலில்] இலங்கையின் புதிய அரசியல் திட்டத்தை முன்னிட்டு லண்டனிலிருந்து ஒரு விசேஷ ஒலிபரப்பு செய்யப்படும். இதில இரண்டு நிழச்சிகள் அடங்கியுள்ளன [1] குடியேற்றநாட்டு மந்திரியிடம் இருந்து ஓர் செய்தி 2 சோல்பரி பிரபு ஜி. ஸி. எஸ். கொரியாஸர் ட்ரமண்ட ஷீல்ட்ஸ் ஆகியோரிடையே ஒரு சம்வாதம்.

இது கொழும்பு ரேடியோவில் 'அஞ்சல்' செய்யப்படுமெனவும் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்த்துச் செல்லப்படுவதோடு கவனரின் பிரசங்கம் ஒன்று ஒலிபரப்பப்படுமென்றும் அறியப்படுகிறது

4 வல்லரசுகள் அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாடு

மொலட்டோவும் மார்ஷலும் லண்டன் வந்தனர்

லண்டன், நவ. 23

செவ்வாய்க்கிழமை யன்று இங்கு நடைபெறும் 4 வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகளின் மகாநாட்டுக்கு ரஷிய அந்நியநாட்டு மந்திரியான திரு மொலட்டோவ் விமானத்தில் இன்று பிற்பகல் இங்குவந்து சேர்ந்தார் பிரஞ்சு அந்நியநாட்டு மந்திரி திரு பிடால்ட் நாளை வரவார். திரு மோலடோவை பிரிடிஷ் அதிகாரிகள விமான நிலயத்தில் வரவேற்றார்கள்.

மார்ஷல் லண்டன் சேர்ந்தார்

அடுத்த செவ்வாய்க்கிழமை நடக்கவிருக்கும் அயல்நாட்டு மந்திரிகள் மகாநாடு சம்பந்தமாக அமெரிக்காவிலிருந்து ஜியார்ஜ்மார்ஷல் 21-ம் தேதியே லண்டன வந்து சேர்ந்துவிட்டார். (ராய்ட்டர்)

வெட்டிய காலுக்குப் பதில் புதிய கால் முளைத்தது

ஸிட்னியில் நிகழ்ந்த அதிசய சம்பவம்

ஸிட்னி, நவ. 25

ஒரு குதிரைக் குட்டியின் காலை ஆபரேஷனபோது வெட்டப்பட்டது 6 மாதத்திற்குப் பிறகு புதிய கால் ஒன்று முளைத்தது.

கால் வளைந்து கொண்டியாகவிருந்ததால் இது குறைந்த விலைக்கு வாங்கப்பட்டது பிறகு பந்தயத்திற்குப் பழக்குபவரிடம் இது விடப்பட்டபொழுது குளம்பு அழுகி ஆரம்பித்தது. குட்டியையே கொன்றுவிட வேண்டியிருக்குமென்ற நிலையில ஸிட்னி சர்வகலாசாலையின் மிருக வைத்திய மாணவர்கள் டாக்டர் கன், முறை ஆபரேஷனகள் செய்தார் 6 மாதங்களுக்குப் பிறகால் முளைத்தது 15 நரம்புகளுடன், தினம் ஒருமணி நேரம் நடக்க அது அனுமதிக்கப்பட்டது. இப்பொழுது பழக்குபவரிடத்தில் லாயத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

புதிய கால் முளைப்பது அபூர்வமானாலும் இதற்கு முன் இதமாதிரி நிகழ்ந்துள்ளது.

இந்தியாவில் துணி, சிமினட உற்பத்தி

தொழில் மந்திரி கொடுக்கும் புள்ளி விவரங்கள்

இறக்பு எல்லை நிலைமை

புதுடில்லி, நவ 26

இந்திய பாராளுமன்றத்தில் தொழில சப்ளை மந்திரி ஸ்ரீ சியாம பிரசாத முக்காஜி கூறினாவது:-

"இந்திய சர்க்காரிடம் 1946-ம் வருஷத்தில் இருந்த இருப்பு, எல்லை இருப்பு 9 24,058 டன். 1947-ம் வருஷம் செப்டம்பர் முடிய அதனடமிருந்த இருப்பு எல்லை இருப்பு 7,81,210 டன் களதான்.

இந்திய மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும், பாகிஸ்தானுக்கும் சேர்ந்தது 18,8465 டன் எல்லை இந்த வருஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது பொது மக்களுக்கும், பொது ஜனங்களுக்கும் உபயோகப்படும் சமான்கள் செய்யும் சிறிய உற்பத்தியாளருக்கும் கொடுக்கப்படடுள்ள எல்லை இதில் சேர்க்கப்படடுள்ளது

இதைத் தவிர மாகாண சர்க்காரகளின் அபிவிருத்தி திட்டங்களுக்கும், மாகாணங்களிலுள்ள கொழிற்சாலைகளுக்கும் வரு எல்லை கொடுக்கப்பட்டபொருள் உற்பத்தி இப்போது குறைந்திருக்கிறது புதிய சக்தியை உண்டாக்க முடியவில்லை. தொழிலாளர்களுக்கு அதிகமாக இருப்பதனாலும், தேசத்தில் கலவரங்கள் நடப்பதனாலும், மூலப்பொருள்களை கொண்டு போவதற்கு வேண்டிய போக்குவரவு சாதனங்கள் போதாமையாலும்தான் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இந்திய யூனியன் பகுதியாக இப்போதுள்ள இடங்களில் 1946-ம் வருஷத்தில் 1542 326 டன் சிமின்ட உற்பத்தியாயிற்று. 1947-ம் வருஷத்தில் செப்டம்பர் 30-ம் தேதி முடிய 10,29 812 டன் சிமின்ட் உற்பத்தியாகி இருக்கிறது. இந்திய யூனியனில் இபபோதுள்ள தொழிற்சாலைகள் 20,75,000 டன் சிமிண்ட் உற்பத்தி செய்யக்கூடும்.

இந்திய யூனியனில் மாசம் ஒன்றுக்கு சராசரி 3020 லட்சம் கெஜம் துணி உற்பத்தியாகியிருக்கிறது.

இந்திய வரவு செலவு திட்டம்

26-ம் தேதி நிதி மந்திரி ரேடியோவில் பேசுவார்

புதுடில்லி, நவ. 25

இந்திய பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டம் சம்பந்தமாக பிரசங்கம் செய்த பிறகு நிதி மந்திரி ஸ்ரீ ஆர். கே. ஷண்முகம் செட்டியார் நவம்பர் 26-ம் தேதி இரவு 8-30 மணிக்கு டில்லி அகில இந்திய ரேடியோ நிலயத்திலிருந்து பேசுவார்.

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள் கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே எங்கள் பந்தோபஸ்தான அறைகளில் அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரூேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2029 டெலிகிராம்: 'ENVAITLIN'
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

"சுதந்திரன்" ஏஜண்டுகள்

மத்திய மாகாணப் பகுதியில் கீழ்க்கண்ட இடங்களில் எங்கள் ஏஜண்டுகளாக நியமிக்கப்பட்டிருப்பவர்களின் விபரம்:--

கோல் ஏஜண்ட்.	K. ரத்னசிங்கம், நம். 186 அம்பகமுவ ஸ்டிரீட், கம்பளை.
மாத்தளை & உக்குவளை	— K செல்வநாயகம் சிரிகாந்தா ஸ்டோர்ஸ் நம். 181 மாத்தளை.
கண்டி	— S திருநாவுக்கரசு, நம் 90 கொழும்புவீதி, கண்டி.
ஹட்டன்	— இம்பீரியல் பிரஸ், ஹட்டன்.
நோர்வுட்	— A நவரட்னா & கம்பெனி நம் 53 மெயின்வீதி, நோர்வுட்.
பொகவந்தலாவ	— VEA இளைபதம்பி, நம். 68 & 83 கொட்டியாகல, பொகவந்தலாவ.
அப்-கொட்	— R ரகிகசன், அபகொட்.
நாவலப்பிட்டி	— MO முருகேசபிள்ளை & சன்ஸ், நம். 4 அம்பகமுவவீதி, நாவலப்
கடுகன்னுவ	— SS ராஜாணிகம், [பிட்டி நம் 188 கண்டிரோட், கடுகன்னுவ
பிலிமத்தலாவ	— SK சின்னதம்பி, கண்டிரோட், பிலிமத்தலாவ
மாவனல்ல	— பொஸிகி புக்டிப்போ, மாவனல்ல
தொளஸ்பாகை	— PR AM துரைசுவாமி & கம்பெனி தொளஸ்பாகை
உலப்பனை	— பி சின்னண்டி, நம். 275 நாவலப்பிட்டிரோட், உலப்பனை.
கொட்டகல	— NP செல்லத்துரை, கொட்டகல,
தலவாக்கலை	— AS அருணாசலம், மெயின்ஸ்டிரீட, தலவாக்கலை.
நுவரேலியா	— சுபரமணியம் ஸ்டோர்ஸ். புதுக்கடைஸ்டிரீட், நுவரேலியா.
பேராதெனியா	— VA அப்பாக்துரை, கொழும்பு வீதி, பேராதெனியா.
அல்கரனோயா	— SM RM S செல்லையாபிள்ளை, நம் 47 ராகலபசார், அல்கரனோயா
பூண்டுலோயா	— MSK கருப்பையாபிள்ளை, நம் 12 அப்பர்பசார், பூண்டுலோயா
உப்புராச	— SSP சுப்பையா, நம் 9 உப்புராச பசார், உப்புராச.
கம்பளை	— KS சுப்பிரமணியம்பிள்ளை, நம் 284 அம்பகமுவ வீதி, கம்பளை
கினிகத்தன	— M சினனத்துரை, கினிகத்தன,
சலாவ	— MKT வெங்கடாசலம்பிள்ளை, நம் 109 நுவரேலியா ரோட், புச
ரம்பொட	— AS TS சிதம்பரம்பிள்ளை, [லாவ நம் 13 ரம்பொட.
ரம்புக்கண	— M N கார்த்திகேசு, நம் 52 மெயின்ஸ்டிரீட், ரம்புக்கண
கட்டுகுத்தாகல	— RN முத்துக்கருப்பபிள்ளை, நுவரேலியாரோட், கட்டுகுத்தாகல

ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு உடனே ஏஜண்டுகள் தேவை.

194 A தட்டாரத்தெரு, கொழும்பு. மானேஜர், சுதந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கமியூனிஸத்தை எதிர்த்துப் போராடுவேன்"

"இலங்கையின் சுதந்திரம் மந்திரி சபையிடம் ஒப்படைக்கப்பட்டது"

"உண்மையில் சுதந்திரமடைந்துவிட்டோமென்று நம்ப முடியவில்லை"

பிரதம மந்திரியின் பிரசங்கம்

கொழும்பு, நவ. 24

பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனாநாயக்காவுக்கு மீரிகமையில் ஒரு வரவேற்பளிக்கப்பட்டது வரவேற்புக் கூட்டத்திற்கு திரு. ஜே. ஈ. அமரதுங்கா தலைமை வகித்தார். திரு. சேனாநாயக்கா பேசுகையில் தமது பாராளுமன்றத்துக்குத் தொந்தமக்களைப் பாராட்டாவிட்டு இலங்கை சுதந்திரம் பெற்றுவிட்டபோதிலும் மிகப் பெரிய ஆபத்தில் மாட்டி விடுமென்று தாம் பயப்படுவதாகவும் இந்தப் பயத்துக்கு காரணமான கமியூனிஸத்தை எதிர்க்க தாம் போராடப் போவதாகவும் கூறினார் இலங்கையில் சிலர் ரஷ்யாவுடன சேர்ந்து தேசத்துக்கு நன்மை பயக்காத விஷயங்களில் ஈடுபட்டுள்ளதாக தமக்கு இந்தியாவில் இருந்து தகவல் கிடைத்துள்ளதாகவும் இலங்கையை கமியூனிஸம் என்னும் ஆபத்து நெருங்கியிருப்பதாகவும் இதனால் சுதந்திரத்துக்கே ஹானி விளையக் கூடுமென்றும் தாம் வயதானவராக இருப்பினும் இந்த ஆபத்தில் இலங்கை சிக்கி ரஷியாவுக்கு பலிபீடப் படுவதைத் தடுக்க கமியூனிஸத்தை எதிர்த்து தாம் போராடப் போவதாகவும் கூறினார்.

தேசத்தின் சுதந்திரம்பற்றி குறிப்பிட்டுவிட்டு சுமார் 140 வருடங்களாக இங்கிருந்தபிரிட்டிஷாரிடம் இனிமேல் ஒரு விதமான உதவியையும் எதிர்பார்க்க முடியாதென்றும் தங்களது வேலைகளை தாங்களே கவனிக்க வேண்டுமென்றும் நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு வெளியிடத்திய உதவிகளை பெறாது இலங்கை மக்களை கவனிக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டு விட்டு அவர்தொடர்ந்து பேசியதாவது:-

"சில காலத்துக்கு முன் அடுத்த வருடத்துடன் பாராளுமன்றத்திலிருந்து நான் ஓய்வெடுத்துக் கொள்ளப் போவதாக கூறியிருந்தேன் ஏனெனில்நான் இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பது என்னுடைய உறுதியுடன் முயற்சித்து அதனைப் பற்றக் கொடுத்துவிட்டேன். எனிமேல் தேசத்தின் வேலைகளை நடத்திச் செல்லக் கூடிய திறமை வாய்ந்தவர்கள் அநேகர் இருக்கிறார்கள். இன்று நேருக்கு நேர் நாங்கள் ஒரு பலங்கொண்ட எதிரியைசமாளிக்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு காலமாக கஷ்டப்பட்டு நாங்கள் பெற்றுள்ள சுதந்திரத்தைப் பாதுகாக்க இந்த எதிரியுடன் போரிட்டு அதனை முற்றாக ஒழிப்பதில் நான் உங்களுடன சேர்ந்து உதவி செய்வேன்."

இதன் பின்னர் ஸர் ஒலிவர் குணத்திலகா பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையின் சுதந்திரம்பற்றி பலரும் பலவிதமாக கேள்விகள் கேட்கின்றனர். சுமார் 140 வருடங்கள் இலங்கையை ஆட்சி புரிந்த பிரிட்டிஷார் இலங்கையைவிட்டுச் செல்வது உண்மையா என்று கேட்கின்றனர் இதனை நான் நம்புகிறேனா என்றும் கேட்கின்றனர்.

இலங்கை உண்மையிலேயே திரு சேனாநாயக்காவைப் பிரதமராகக் கொண்ட மந்திரி சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரு. சேனாநாயக்கா விரும்பிய ஒப்பந்தங்களே இவைகளன்றி வேறைகள் அவர்மீது திணிக்கப்பட்டனவல்ல. இலங்கைக்கு சுதந்திரம் அளிக்கப்படுவதற்குப் ஒப்பந்தங்களுக்கும் தொடர்பில்லை திரு. சேனாநாயக்கா மீது கொண்ட நம்பிக்கையில் விரோதம் கொண்டவர்கள் தான் இதனைக் கண்டிக்கின்றனர்.

ஜனாப் டி. பி. ஜாயா பேசுகையில் திரு. சேனாநாயக்கா இலங்கையிலுள்ள எல்லா சமூகத்தினரையும் ஒன்று சேர்த்து நடத்தவதற் பாராட்டியதுடன் அவரது முயற்சியால் கிடைத்த சுதந்திரத்தைக் கண்டிக்கும் எதிரிகளின் பேச்சுகளைக் கவனிக்க வேண்டாமென்றும் கூறினார் ஸர் முகம்மது மாக்கான் மரைக்கார், டாக்டர் எல் ஏ. ராஜரட்ஸ ஆகியோர் பேசியபின், ஒரு ஸ்.திருநாவுக்கரசு பேசுகையில், "இவ்வளவுகாலமும் அடிமை நாடாக இருந்து இரக்கப் பெருக்கினறி சுதந்திரம் அடைந்துவிட்டோம் உண்மையில் நாங்கள் சுதந்திரமடைந்து விட்டோமென்பது நம்ப முடியாதிருக்கின்றது. ஆனால் எங்களுக்கு முழுச் சுதந்திரமும் கிடைக்கதுவிட்டதென்பதில் சந்தேகம் இல்லை" இவ்வாறு கூறினார் டாக்டர் பால் ஈ பீரிஸ் திரு டபிள்யூ. விஜயரத்னா, திரு மாயபுகரா முதலியோரும் பேசினார்கள். திரு. ஸி குமாரசுவமி திரு சேனாநாயக்காவைபாராளுமன்றத்துக்கு தெரிந்துவிட்டதற்கு ஹப்பிட்டிகம் கோரளை மக்களை பாராட்டினார்

பெண் குத்திக் கொலை

கொழும்பு, நவ 24

அம்பலாங்கொடைபோலிஸ் பகுதியில் கொடிதெனு எனனுமிடத்தில் பொடி நோனா எனனும பெண் குத்திக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது. கள்ள பிலாடு பவுலிஸ சிலவா என்பவர் அப்பெண் ஸநானம் செய்து திரும்பி வருகையில் வழிமறித்து குத்திக் கொன்றதாகவும் அதன் பின் எதிரி தமைத் தாமே நெஞ்சில் குத்தியும் கழுத்திலும் கத்தியால் வெட்டிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது. கை செய்யப்படடு ஆஸ்பத்திரியி அனுமதிக்கப்பட்ட எதிரியின் மரண வாக்குமூலம் எடுக்கப்பட்டது. அப்பெண்ணுடன் தான் தொடர்பு கொண்டிருந்ததாகவும் அபபெண் தன்னை ஏசியதாகவும் தானே அப்பெண்ணைக் குத்திக் கொன்றதாகவும் அவர் கூறினார் மாஜிஸ்டிரேட் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடத்தினார்.

இந்தியாவிலிருந்து வெங்காயம் வருகிறது

கொழும்பு, நவ 24

இந்தியாவிலிருந்து கறிமஸற்கு முன் சுமார் 800 டன் வெங்காயம் வந்து சேருமென உணவுக் கமிஷனர் திரு க. ஆறுமுகம் கூறுகின்றார் இந்தியா இலங்கைக்கு அனுப்பும் 600 டன் விதை வெங்காயத்தைவிட மேலதிகமாகவே இந்த 800 டன் வெங்காயத்தையும் அனுப்புகிறது. இந்தியாவிலிருந்து வெங்காய இறக்குமதிக்கு வர்த்தகர்களுக்கு உதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார் சமீபத்தில் சென்னை அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக அடுத்தவருடத்தில் மாத விகிதம் 1000 டன் வெங்காயம் கிடைக்குமென்று தாம் திடமாக நம்புவதாக அவர் கூறுகின்றார்.

போலிஸ் தலைவர் புரட்சி செய்யமாட்டார்

சயாம் தளபதிக்குக் கடிதம்

பாங்காக், நவ 23

இரு வாரங்களுக்கு முன் சயாம் அரசாங்கத்தைக் கைப்பற்றி புதிய அரசாங்கம் நிறுவிய தளபதி சங்கராமுக்கு சயாம் போலிஸ் தலைவர் தான் புதிய சர்க்காரை எதிர்த்துப் புரட்சி செய்யப் போவதாகவென்று கடிதம் எழுதியிருக்கிறார் இவர் பாங்காக்குக்கு 70 வது மைல் தூரத்திலுள்ள ஒரு ஆட்சிக்கு தடபிடியாடி மறைந்திருந்தார். (ராய்ட்டர்)

மருதானையில் பொதுக் கூட்டம்

திருபீட்டர் கெனமனுக்கு வரவேற்பு

கொழும்பு, நவ 24

சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதானை பகுதி வாக்காளர் பாராளுமன்ற அங்கத்தினர் திரு பீட்டர் கெனமனுக்கு அரசாங்க மந்திரிய பாடசாலையில் ஓர் குதூகல வரவேற்பளித்தார்கள் திரு எச் பெரேரா தலைமை வகித்தார்.

மருதானை பகுதி பனிப்பல் சபை அங்கத்தினர் ஜீ வந்தரசிங்கா, டாக்டர் குமாரசுவாமி, சுதேச வைத்தியர் யாபா, ஸ்ரீ மதி ஆயிஷாராலு, சுகததாஸ, பாரத முதலியவர்கள் அவரை வரவேற்றுப் பாராட்டினார்கள்

ஸ்ரீமதி ஆயிஷாராலு திரு கெனமனுடன் போட்டியிட்டுத் தேர்தலில் தோல்வி அடைந்தவர் என்றும் ஆனால் திரு கெனமன் தேர்தலுக்கு முன்னும் பின்னும் ஒரே கொள்கையுடன் இருப்பதைத் தாம் பாராட்டுவதாகவும் தெரிவித்தார், பெண்களின் நலத்திற்காகவும் ஸ்ரீதன ஒழிப்புக்காகவும் பாடுபடும்படி அவரை வேண்டிக்கொண்டார்.

பிரசங்கங்களின் பின் திரு கெனமன் தமது பதிலளிப்பை வரவேற்பளித்தவர்களுக்கு நன்றி கூறி இன்றைய அரசியல் நிலைமைபற்றி ஓர் சிறு பேச்சு நிகழ்த்தினார்

கள்ளமாக கஞ்சா மரங்களை வளர்த்தார்

எதிரிக்கு அபராதம்

திரிகோணமலை, நவ 24

சின்னியா கொய்யாப்புளி வாசியாகிய உமமாமகமது மிரசா என்பவர் கள்ளமாக 19 கஞ்சா மரங்களை உண்டாக்கியதாக கலால் இலாகா அதிகாரிகளால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு திரிகோணமலை மாஜிஸ்ரேட் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரி குற்றவாளியென்று கண்ட நீதிபதி எதிரிக்கு ரூ. 300 அபராதம் விதித்தார். அபராதம் செலுத்தத் தவறின் ஆறு வாரச் சிறைத்தண்டனை பெறும் தீர்ப்பளித்தார்.

வழி மறித்து தாலிக்கொடி பறித்தார்

எதிரிக்கு 18 மாதச் சிறை

ஊர்காவற்றுறை நவ. 2

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த நாரந்தனை கிராமவாசியான செவன்திபெண் ரோசமுத்து என்பவர் சென்ற ஆகஸ்ட மாதம 3-ம் தேதி சின்னமடுக் கோவிலுக்கு செல்லும் வழியில் அதே ஊரைச் சேர்ந்த மாணிக்கன் மனுவேல் என்பவர் வழிமறித்து அப்பெண்ணின் கழுத்தில் இருந்த தாலிக்கொடியை பறிக்காக குற்றம் சாட்டி ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணை முடிவில் எதிரிக்கு மாஜிஸ்ரேட் 18 மாதச் சிறைத்தண்டனை விதித்தார்

சட்ட விரோதமாக சாராயம் வற்றார்

எதிரிக்கு அபராதம்

திரிகோணமலை, நவ 24

திரிகோணமலை சோனகத் தெருவைச் சேர்ந்த ஏ. கே நாயர் என்பவர் சட்ட விரோதமாய் சாராயம் விற்றதாக கலால் இலாகா அதிகாரிகளால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு நோலாடி செய்சாமுவேல் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டு முடிவில் மாஜிஸ்ரேட் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ரூ 200 அபராதம் விதித்தார் அபராதம் செலுத்தத் தவறின் ஆறுவாரச் சிறைத்தண்டனை என்றும் தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணத்தில் சேமிப்பியக்கம்

யாழ்ப்பாணம், நவ 24

சேமிப்பியக்கத்தின் பிரசாரக் கூட்டம் ஒன்று கோப்பாய் கிறிஸ்தவ கலலூரியிடை பெறறது.

காரியாதிகாரி டி. முருகேசபிள்ளை தலைமை வகித்தார் கிராமச் சங்கத் தலைவர் ஸ். சுப்ரமண்யம், சங்கை ஏ. பி. கனகரத்தனம், ஆர். எஸ். எடவர்ட்ஸ், கே. எஸ் முத்துவேலு ஆகியோர் பேசினர்

பாராளுமன்ற அங்கத்தினர் திரு. வன்னியசிங்கம் இயக்கநிற்குக் கமது ஆதரவைக் கொடுத்து ஓர் செய்தி அனுப்பியிருந்தார்.

சேமிப்பின் அவசியத்தை பேச்சாளர் வற்புறுத்தினர்

கள்ளமாக கஞ்சா செடி வளர்த்தார்

எதிரிக்கு அபராதம்

திரிகோணமலை, நவ. 24

சின்னியா கொய்யாப்புளி வாசியாகிய முஹம்மது காஸீம் என்பவர் சட்டவிரோதமாய 32 கஞ்சாச் செடிகள் உண்டாகி வளர்த்து வந்ததாக கலால் இலாகா அதிகாரிகளால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்ரேட் திரு நோலன் டி சொய்சா அவர்களால் விசாரணை செய்யப்பட்டு முடிவில் மாஜிஸ்ரேட் எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ரூ. 300 அபராதம் விதித்ததாகவும் அபராதம் செலுத்தத் தவறின் ஆறு மாதச் சிறைத்தண்டனை பெறும் தீர்ப்பளித்தார்.

பெண் யானை களவாடப்பட்டது

கொழும்பு, நவ 2

பன்னலா எனனுமிடத்தைச் சேர்ந்த எல். பி. முயான்லிங்கரி மகாதயா ஆகிய இவருக்கும் சொந்தமான ரூ 8000 மதிப்புள்ள ஒரு பெண் யானை 21-10 தேதி குடிதெனியா எனனுமிடத்தில் களவுபோய்விட்டதாகக் கூறப்படுகிறது இதுசம்பந்தமாக இந்த யானையை இரண்டு வருடங்களாக பராமரித்து யானைப் பாகனான துலு அலவாதை ராலா என்பவர் மீது சந்தேகக்கப்படுகிறது

புதிய பாராளுமன்ற கறபு வழா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சர் ஜியோப்ரே லேப்டன், பிரதம காரியதரிசி முதலிய மூன்று அதிகாரிகள், யுத்த சபையிலிருந்த மந்திரிகள் ஆகியோர்கள் இலங்கையுடைய ஒப்துழைப்புக்கும் நன்மைகளுக்கு, தனி விசேஷவளுக்கும் அந்த அரசாங்கத்தின் வெற்றிதகுந்த சான்றாகும்

எனது நியமனத்தைத் தொடர்ந்து சோல்பரி வெத்தரால பிரதம சேனாதிபதியையுமறருர் அவரடைய ஆறு ஸ்டாப் ஆபீஸர்களையும், ஒக்கிஷ்ஷிப்பையும் கண்டு 194 மவருடைய சம்பாமாதம் அனுகலைக்கடு வரையுத்த சபை அமேரமரஸமான மனப்பான்மையுடன் தனது கடமைகளை செய்து முடித்தது.

இது நிற்க, யுத்த காலமிருந்தாலும், சுயட்சி பாடை பலமுனைகளிலும் இலங்கையின் வேகத்தை தடை செய்யப்பட்டு ஒன்று தீர்மானிக்கப்படுமென்று 1914 ம ஆண்டு ஜூலை மாதம் சோல்பரி கமிஷன் நியமிக்கப்பட்டதை கேனல் ஒலிவர் ஸ்டான்லி வார்கள் தெரியப்படுத்தினார்கள். சோல்பரி பிரபுவுடைய சகாக்களும் உடனே இலங்கை வந்து சேர்ந்தார்கள். இந்நாட்டு அரசாங்கப் புத்தகங்கள் நடக்கவுகளை எவ்வாறு சமாளிக்கிறதென்பதை அவர்கள் ஆராய்ந்து கண்டார்கள் இலங்கைத் தலைவர்கள் இந்தச் சமயத்தில் காட்டிய அரசியல் ஞானத்தை சோல்பரி மிஷனர்கள் மதித்திருக்கிறார்கள் என்பதற்கு அவர்கள் செய்த சிபார்சுகளே போதிய அத்தாடசியாகும். அவர்களுடைய அறிக்கை அங்கீகரிக்கப்பட்டதும், அதன் பின் நடந்த விஷயங்களும் நீங்கள் அறிந்தவையே.

எமக்கு இப்பொழுது அளிக்கப்படிருக்கும அரசியல் முறையும், விரைவில் கிட்டப்போகும் டொமினியன் அந்தஸ்தும், பூரண பொறுப்பாட்சியையும் ஜனநாயக ரீதியான நிழ்கைகளையும் அடிக்கல்லாக கொண்டவை இலங்கையின் சுதந்தரப் போராட்டத்தில் உங்கள் தலைவர்கள் எப்பொழுதுமே இந்த விதமான அரசியல் சுதந்தரத்தையே வற்புறுத்திக் கேட்டிருக்கிறார்கள். டொனமூர் அரசியல் திட்டத்தின் முக்கிய ஆட்சேபணைகளில் ஒன்று அது இம்மாதிரி பாராளுமன்ற ரகத்தைச் சேரவில்லை என்பதுதான். மந்திரிகளாகிய நாங்கள் செய்ததெல்லாம் தாவில் தயாரித்ததுடமும். மந்திரி சபை முறைக்கு சேர் அன்றுகால் கெட் அளிக்க உற்சாகமும் சேர்பரி அறிக்கைக்கு அஸ்திவாரமாக அமைந்தன.

அர்த்தமற்ற அரசியல் சூழ்ச்சிகளும் முரண்பட்ட கொள்கைகளும் மலிந்த இக்காலத்தில் நீங்கள் பெற்ற அரசியல் சுதந்தரம் உங்கள் மீது கிணிக்கப்படவில்லை என்பதையும், இலங்கையிலும்பிறவிடங்களிலும் பெற்றிருக்கிற தென்பதையும் ஞாபகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. மேனாடுகளிலிருந்து வேறுபட்ட பழக்கவழக்கங்களையும் சமய பிரதாயங்களையுமுடைய ஓரிந்தேசநாட்டில் பிரிட்டிஷ் முறையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றம் பூரண ஜனநாயகரீதியான வாழ்வையே தரக்கூடுமென்பதை நீங்கள் நிரூபித்துக் காட்டவேண்டும். இது சுலபமான வேலையன்று. சேர்பரி பிரபு கூறியதுபோல் "பொறுமை, விட்டுக்கொடுத்தல் முதலிய அருங்குணங்களோடு சகிப்புத் தன்மையும் இணக்கமும் வேண்டும்" இக்குணங்களோடு நான் நலவெண்ணத்தையும் சேர்மை மனப்பான்மையும் சேர்க்க விரும்புகிறேன்

கடந்த சில மாதங்களுக்குள் காலச் சக்கரம் மிக வேகமாக சுழன்றிருக்கிறது. எமது பாராளுமன்றம் நாளைதான் முதன் முதலாக கூடுகிற போதிலும், கடந்த கூட்டத்திற்கு முன்பே இலங்கை பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சமஸ்தானப் பிரதேசமாகிவிடுமென்று நம்ப இடமுண்டு. இது நம்பமுடியாத அளவுக்கு நன்றாய் இருக்கிறபடியால் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கவேண்டுமென்று சில அதமவாதிகள் கூறுகிறார்கள் அவர்கள் அப்படி நினைப்பது தவறென்று நான் உறுதி கூறுவேன். கூர்மையான பரிசீலனைக்குப் பின் தயாரிக்கப்பட்ட உடன்படிக்கைகளை பிரதம மந்திரி அவர்களே, தமது மனசாட்சியான நல்லெண்ணத்தின் அறிகுறியாக, முதலில் வெளிப்பிட்டார். சுதந்தரமடைந்த இலங்கை பிரிட்டனோடும் மற்ற சாம்ராஜ்ய நாடுகளோடும் நெருங்கிய தொடர்புவைத்துக்கொள்வதால் அதற்கே நன்மை உண்டாகும் என்பது அவரது நம்பிக்கை. இலங்கைக்கு அளிக்கப்படும் சுதந்திரத்தையிடடு யாராவது நஷ்டமேதுமறறிருந்தால், சென்ற வெள்ளிக்கிழமை இலங்கை சுதந்திர மசாதா இரண்டாவது முறையாக வாசிக்கப்பட்டபோது காமன்ஸ் சபையில் நிழ்ந்த பிரசங்கங்களும், குடியேறற நாட்டு மந்திரி அவர்கள் விடுத்த மனபூர்வமான செய்தியும் அதை அகற்றி விடுமென்று நம்புகிறேன் இலங்கை உண்மையில் சாம்ராஜ்ய நாடுகளில் ஒன்றாயிருந்து சேவை செய்ய விரும்புகிறதென்ற நம்பிக்கையுடன் இவ்வொப்பந்தங்களைப் பற்றி பேச்சுவார்த்தைகள் நடந்தறியுள்ளன என்பதை நான் குடியேற்ற நாட்டு மந்திரியுடன் நடத்திய சம்பாஷணையின் மூலம் உறுதியாக்கூற வேன். இத்தீவின் பெருபான்மையான மக்களின் விருப்பமும் அதுவே என்பது எனது நம்பிக்கை.

இந்திய நாட்டு ஸதாபனத்தில் அங்கத்துவம் பெறும் அந்தஸ்தை கிட்டி வரும் இச்சமயத்தில், அவ நம்பிக்கையோடும் ஐயுறவோடும் இலங்கை இந்த சுதந்தரத்தை ஏற்றுக்கொள்ளுகிறதென்றாலோ பிற நாடுகளில் ஏற்படுமானால், அது இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு பெரும் துரோகமாகக் கருதப்படும்.

எதிர்காலத்தில் பல இடையூறுகள் இருக்கின்றன. இதுகாறும் அரசியல் சுதந்தரம் பெறுவதில் செலுத்தப்பட்ட சக்திகள் இனிமேல் சமூக பொருளாதார பிரச்னைகளில் செலுத்தப்பட வேண்டும் வெற்றியின் வெற்றி தோல்வியிலிருந்து அரசாங்கத்தின் கிரணி கிரகிக்கப்படும் இலங்கையின் பழைய கால நண்பன் என்ற முறையில் உங்கள் எதிர்கால அரசியல் வெற்றி பெறுவதாக என்று வாழ்த்துகிறேன்.

கௌரவ அதிதிகள்

கொழும்பு, நவ 25

இலங்கையின் புதிய பாராளுமன்ற திறப்பு விழா இன்று நடைபெறுவதை முன்னிட்டு தூர கிழக்குப் பகுதியிலுள்ள கடற்படை, கரைப்படை, விமானப்படை அதிகாரிகள் கேற்ற இலங்கைக்கு வந்துள்ளனர் கிழக்கு கடற்படைக் தளபதி ஸர் ஆகர் பாலிஸர், தூர கிழக்கு நேசநேச தரைப்படை லெப்டினன்ட் ஜெனரல் ஸர் என். ரிச்சை, தூரகிழக்கு விமானப்படை மார்ஷல் ஸர் ஹோக் லேயிட் ஆகியவர்கள் இங்கு வந்துள்ளனர் அடுக்க சில நாட்களுக்கு இவர்களும் இவர்களது மனைவியரும் கவர்னரின் விருந்தினராக இருப்பர். இவர்கள் பாராளுமன்ற திறப்புவிழாவுக்கு வந்துள்ள கௌரவ அதிதிகளாகும்.

இந்த பாராளுமன்ற திறப்பு விழாவை திரு கிளிபோர்ட் ஹோர்ண்பியும் ஸ்ரீமதி ஹோர்ண்பியும் படம் பிடிப்பார்கள். இதற்காக விசேட படம் எடுக்கும் கருவிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவென்று தெரிகிறது.

ஆலயங்களில் விசேஷ பிரார்த்தனைகள் நடந்தன

பாராளுமன்ற திறப்பு விழாவை முன்னிட்டு நேற்று எங்கும் பிரார்த்தனைகள் நடத்தப்பட்டன. கிறிஸ்தவ தேவாலயங்கள், பௌத்த ஆலயங்கள் பள்ளிவாசல்கள், இந்து ஆலயங்கள் முதலியவற்றில் விசேட பிரார்த்தனைகள் செய்யப்பட்டன இவற்றில் கவர்னரும் மந்திரிமாரும் மற்றும் பாராளுமன்ற அங்கத்தினர், செனட் சபையினர் யாவரும் நேற்று பங்குபற்றினர்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக 1947-ம் ஞ நவம்பர் மீ 25உ இந்த பத்திரிகை 194A, தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கூடத்தாரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா

தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்

என் எஸ் கிருஷ்ணன், டி. ஏ மதுரம், டி ஈ. வரதன், எம்.எஸ். சரோஜினி, எம். ஆர் சந்தானலக்ஷ்மி, காளி என் ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

நாளை ஆரம்பம்!

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடி ஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப்படம் காண்பிக்கப்படும்.

அரிய நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜனாப் துர்ரானி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்

320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்

சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன.

முந்துங்கள் விலை ரூ. 3-50

இந்தியா ரூ. 3-8-0.

V. P. வேறு

கிடைக்கும் இடங்கள்:-

V. M. ஷம்சுத்தீன்,

85, பழைய சோனகத்தெரு, கொழும்பு

எல். கே. ஷேக் முகம்மது, பிரதர்ஸ் (மரைக்கார் கடை) பூக்குளம் பார்க்கிற்கு எதிரே நீர்கொழும்பு

இலங்கைக்கு ஜெர்மன் ஜவுளி

பிரிட்டனிலிருந்து பல பொருள்கள் வந்துள்ளன

கொழும்பு, நவ. 24

பிரிட்டனில் இருந்து இன்று காலை இங்கு வந்து சேர்ந்த மணி பூர் என்றகப்பலில் இலங்கைக்கு ஜெர்மன் ஜவுளி வந்துள்ளது இதில் சுமார் 137 டன் ஜவுளி வகைகள் இருப்பதாகத் தெரிகிறது. இதைப்பலில் இலங்கைக்கு 112 கார்களும், தென்மேற்கு பஸ்கம்பெனிக்கு 4 புதிய இரண்டு தட்டு பஸ்களும், இலங்கை ரயில்வேக்கு 500 டன் ரயில் தண்டவாளங்களும், 2200 டன் சிமிந்தியும், 363 தபால் பேக்குகளும் பிரிட்டனிலிருந்து வந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org